Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆடி 31 ஆம் நாள் ரவி அவ்வல் 3 (15-8-61) செவ்வாய்க்கிழமை இதழ் 156

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானால்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு

அதிதியான வரிகள்

வாபஸாகாவிடில் கிளர்ந்தெழுவர்

அரசாங்கத்துக்கு கொல்வின் எச்சரிக்கை

கண்டி, திங்கள்

"அநியாயான வரிகளை அரசாங்கம் வாபஸ் பெறுவதற்கு தயாராக இல்லையென்றால் இந்த நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதைத் தடுக்கமுடியாது"

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகரும் வெள்ளவத்தை கல்கிசைத் தொகுதி எம். பி. யுமான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா கூறினர்.

1953-ம் வருடத்தில் நடைபெற்ற ஹர்த்தால் நினைவு தினக் கூட்டம் கண்டி நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசினர்.

1953-ம் வருடத்தில் யு. என். பி. அரசி விலையை உயர்த்தியது. இன்றைய அரசாங்கம் கூட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையை உயர்த்திவிட்டது" என்று டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

நாட்டில் பெருளாதார நெருக்கடி ஏற்படுமென்று அவர் கூறினர்.

"தொழிற் சங்கங்கள் மூலம் வெற்றிபெற்ற ரூ. 17-50 சத விசேஷ அலவன்ஸை தொழிலாளர்களிடமிருந்து மீண்டும் பிடுங்கிக் கொள்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்வது வெட்கக்கேடு" என்று டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா கூறினர்.

உண்மையான தலைமைப் பதவியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்து கொண்டனரென்றும் சுதந்திரக் கட்சியின் கையில் நாட்டின் எதிர்காலம் சிறப்பாகத் தோன்றவில்லையென்றும் டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

பதுளையில் டி' சூசா

பதுளையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சென்ட்டர் டொறிக் டி' சூசா பேசுகையில் சமசமாஜக் கட்சியின் உதவியுடன்தான் சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததென்றும் முன்புதான சமசமாஜக்கட்சி வேலைநிறுத்தங்களை நடத்தி வந்ததால் தங்களால் வேலை செய்யமுடியாது போய்விட்டதென்று கூறினரென்றும் இல்பொழுது வேலைநிறுத்தம் இல்லாதிருந்தும் பிரச்சினைகள் அதிகமாகி விட்டதென்றும் கூறினர்.

சமசமாஜிகள் பொறுப்பு

கொழும்பு, திங்கள்

எளிய பொதுமக்கள் மீது இன்று விதிக்கப்பட்டுள்ள அநியாயமான வரிகளுக்கு சமசமாஜக் கட்சிதான் நேரடியான பொறுப்பு" என்று எம். ஈ. பி. பிரமுகர் திரு. ரொபர்ட் குணவர்த்தன ஒரு கூட்டத்தில் பேசுகையில் குற்றம் சாட்டினர்.

எம். ஈ. பி. இளைஞர்தொண்டர் படையில் ஒருலட்சம் பேர் சேரக்கூடிய அறிகுறிகளிருப்பதாக திரு. ரொபர்ட் குணவர்த்தன சொன்னர்.

3000 ஏக்கர் தோட்டநிலம் அரசாங்கத்திற்கு சொந்தமாகும்

கொழும்பு, திங்கள்

நிவர்த்திகலை கொகுதியைச் சேர்ந்த கிரான்ட் மத்திய தோட்டத்திற்குச் சொந்தமான 3000 ஏக்கர் காட்டுக் காணியை தேயிலைக் காலனியாக்குவதற்காக அரசாங்கம் எடுக்கும் முதலாவது, இரண்டாவது மூன்றாவது குடியேற்றத் திட்ட வேலைகள் மடலகமா தேயிலை கவனியில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 ஏக்கர் வீதமாக 500 ஏக்கர் தேயிலை பயிரிடப்பட்ட நிலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நாளை நல்லூரில் கொடியேற்றம்

நாளை புதன் கிழமை பகல் 1-30 மணிக்கு நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோவிலில் கொடியேறி திருவிழா ஆரம்பமாகிறது.

24 மணி நேரத்தில் தமிழில் அலுவல்கள்

மாநகரசபை ஊழியரிடம் கமிஷனர் கேட்கிறார்

யாழ்ப்பாணம், செய்வாய்

மாநகர சபையின் அலுவல்கள் யாவும் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் மொழியிலேயே நடத்தப்படவேண்டுமென்ற சபையின் விருப்பத்துக்கிணங்க மாநகரசபை அலுவல்கள் யாவையும் தமிழ் மொழியில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிலும், அதற்குரிய சாத்தியக் கூறுகளை அறிவதிலும் யாழ்ப்பாணம் மாநகரசபை கவனஞ் செலுத்துகின்றது.

தமிழ் மொழிமூலம் நிர்வாகம் நடத்துவதில் மாநகரசபை ஊழியர்களுக்கு இருக்கும் இன்னல்களை அறிவிக்குமாறு மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. வி. சின்னையா நேற்று அவர்களுக்கு. ஓர் விசேஷ சுற்றறிக்கையை அனுப்பிவைத்துள்ளார்.

24 மணி நேரத்துக்கு தமிழ் மொழியில் கருமம் ஆற்ற இயலுமா, இல்லாவிடில் ஊழியர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்கள் என்னவென்பதைப் பற்றியும் உடனே அறிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

எழுதுவினைஞர்களும் உடனடியாகத் தமிழில் கருமமாற்றக் கூடியவர்களாக இருக்கிறார்களாவென்றும் அவர்களுக்குரிய கஷ்டங்களை அறிவிக்குமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

இம்மொழி மாற்றத்தை அமுல் நடத்த கருவிகள் ஏதேனும் வேண்டுமா என்ற விபரத்தையும் கேட்டிருக்கும் சுற்றறிக்கைக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டுமெனவும் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

மாநகரசபை தமிழ் மொழி நிர்வாகம் சம்பந்தமாக பல தடவைகளில் அங்கத்தவர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்களெனபதும் இது பற்றி முன்பும் ஓர் சுற்றறிக்கை விடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் நிதிக்கமிட்டி அறிக்கை தனி ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் திரு. அழகையா சுட்டிக்காட்டியபோது அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட விவாதத்தில் 'கூடியவரை தமிழில் கொண்டுவரத் தெண்டிக்கிறேன்" என்று மேயர் தெரிவித்த சமாதானத்தை கூட்டாகப் பல அங்கத்தவர்களும் எதிர்த்திருந்தனர், "கூடியளவு தமிழ் என்றில்லாமல் முழுக்க முழுக்கத் தமிழில்" வரவேண்டுமென்று திரு. கே. எஸ். நடராசா அப்பொழுது தெரிவித்தார். திரு. இராசகூரியர் ஆங்கிலத்துக்கும் இடம் வேண்டுமென்று சொன்னபோது, திரு. பி. எஸ். சோமசுந்தரம் எதிர்த்துரையாடியதும், திரு. துரைசிங்கம் ஆங்கிலத்தில் நடவடிக்கை நடக்கவேண்டுமென்று வற்புறுத்தினால் கூட்டத்தை நடத்தக் கோரமே இல்லாதவாறு வெளியேறுவார்கள் என்றும் வற்புறுத்தினர்

அடுத்த கூட்டத்திலும் இந்நிலை இருக்குமானால் தாங்கள் வெளியேறப்போவதாக உதவி மேயர் திரு. என். டி. செல்லத்துரை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து மேற்படி சுற்றறுக்கையை ஆணையாளர் விசேஷமாக அனுப்பியிருக்கிறார்.

கென்யாட்டாவுக்கு அமோக வரவேற்பு

ஆடிப்பாடி வரவேற்றனர் ஆபிரிக்கர்கள்

லண்டன், ஆக. 14

இன்று விடுதலையான ஆபிரிக்கத் தலைவர் ஜோமோகென்யாட்டா விடு திரும்பியபோது ஆயிரக்கணக்கான ஆபிரிக்கர்கள் நாட்டியமாடியும், பாட்டுக்கள் இசைத்தும் அவரை வரவேற்றனர். 1000 ஆபிரிக்கர்கள் கேற்றிரவு முழுவதும் தங்கள் தலைவரின் வருகைக்காகக் காத்திருந்தனர். கென்யாட்டா காரிலிருந்து இறங்கியபோது மக்கள் கூட்டம் 10,000 ஆகப் பெருகியது. எதிர்க்கட்சிகளிடமிருந்து அவரைப் பாதுகாக்கு முகமாக முதல் சில நாட்களுக்கு அவருக்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனத் தெரிகிறது.

ஹிந்து–சீக்கியர் பகைமைபற்றி பிரசுரங்கள்

புதுடில்லி, ஆக. 14

ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்குமிடையே பகைமையை உண்டாக்கும் முறையில் இரு பிரசுரங்கள் வெளியாகியிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருப்பதாய் உள்நாட்டு மந்திரி ஸ்ரீலால் பகதூர் சாஸ்திரி லோகசபையில் இன்று கூறினர்.

ஜப்பானில் மிக்கோயன்

டோக்கியோ, ஆக. 14

சோவியத் முதலாவது உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் ஜப்பானுக்கு 9நாள்விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். அவருக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. 7000 பொலிஸார் அவரது பாதுகாப்புக்காகக் கடமையாற்றுகின்றனர்.

சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு

அடுத்த வருட செலவுக்கு நிதி

கொழும்பு, திங்கள்

சட்டவிரோதக குடியேற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்குச் செலவிடுவதற்காக 1,15,446 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாதம் முதல் திகதியுடன் ஆரம்பமாகும் அடுத்த நிதிவருடத்தில் செலவிடுவதற்காக இத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் இலாகாவின் செலவினத் தொகையில்தான் இத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கான இராணுவ, கடற்படை உதவிக்கான செலவுத் தொகை இத் தொகையில் சேர்க்கப்படவில்லை.

பிரயாணத்துக்கு 65,000 ரூபாயும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் பற்றிய தகவல்களுக்கு 7,500 ரூபாயும் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளப்பணத்துக்கு 18,998 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் விழா

மாவிட்டபுரம், திங்கள்

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தின் ஆதரவில் அருணகிரிநாதர் விழா இன்று பகல் 3 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பமாகி நடைபெறும். கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, சங்கீத கதாப்பிரசங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

பொருட்காட்சியை மேயர் திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

எதிர்வரும் நல்லூர் கந்தசுவாமிகோவில் திருவிழாவின் போது ஈழநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் அடங்கிய ஒரு பொருட்காட்சிச்சாலையையும் விற்பனைநிலையமொன்றையும் திறப்பதென ஈழப்பொருளாதார அபிவிருத்திச் சங்கம் முடிவுசெய்துள்ளது.

இச்சங்கத்தின் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை அச்சங்கத் தலைவர் திரு. சூரசங்கரர் தலைமையில் நடைபெற்றது.

கோவில் மேற்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் இப் பொருட்காட்சிச் சாலையையும் விற்பனை நிலையத்தையும் நாளை புதன்கிழமை யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா திறந்துவைப்பார்.

வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்குவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இலவம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

சமஸ்கிருதம்

G. C. E. (Advanced Level), University Entrance பரீக்ஷைகளுக்கு வேண்டும் பாஷையும் பாடங்களும் சொல்லுக்குச் சொல்லாய் ஆங்கிலத்திலும் தமிழிலும் வகுப்பு முறையில் கற்பிக்கப்படும்.

தமிழும் அவ்வாறே இலக்கணத்துடன் கற்பிக்கப்படும்.

ஒரு பாஷையைப் படித்தவர் பிற பாஷை ஒன்றை மூன்று மாதங்களில் நன்கு படித்துவிடலாம் என்பர் ஆராய்ச்சியாளர். ஆகையால் வேண்டுவோருக்கு ஆங்கிலமும் இலவசமாக முறையில் கற்பிக்கப்படும். லண்டன் பரீக்ஷை இன்னும் இரண்டு வருடங்களுக்கே உள்ளது. இதற்கு முற்சித்தி எப்பரீக்ஷையிலும் தேவையில்லை. மற்றும் விபரம் கேட்டறிக.

V. கந்தையா, Retd Supdt of Audit, 698/4, சபாபதி வீதி, தலையாளி) யாழ்ப்பாணம்.

பிரதிநிதிகள் தேவை

வாகன, யந்திரச் சொந்தக்காரர்களிடையேயும், சாரதிகளிடையேயும் செல்வாக்குள்ளவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, சுன்னாகம், காங்கேசன்துறை, முல்லைத்தீவு, மன்னர், கிளிநொச்சி ஆகிய இடங்கட்கு பிரதிநிதிகளாகத்தேவை. சிறந்த வருமானம். உடனே விண்ணப்பிக்கவும். டிஸ்றிக் மனேஜர், ஸெகியூரிட்டி & ஸேவிஸ் அஸோஸியேஷன், 11, கதிற்றல் ஸ்ரீற், யாழ்ப்பாணம்.

கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர் சொந்தப் பாவிப்பு. அசல் நிலமை. நேரில் பார்வையிடவும். வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

பீக்கிங்கில் நிக்ருமா

மாஸ்கோ, ஆக. 14

காஞ அதிபர் டாக்டர் நிக்ருமா நேற்று மாஸ்கோவிலிருந்து பீக்கிங்கிற்குப் பிரயாணமானர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இன்று இந்தியாவின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்திரி ரசாயன உரத் தொழிற்சாலை, பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை, ரூர்கலா, துர்க்காபூர், பிலாய் உருக்காலைகள், நெய்வேலித்திட்டம், அணுசக்தி நிலையம், பங்களூரில் உள்ள விமான டெலிபோன் தொழிற்சாலைகள் போன்ற எத்தனையோ பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அந்நாட்டில் சாதிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் 3-ம் ஐந்தாண்டுத் திட்டம் 11,600 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு சென்றவாரம் தான் கையெழுத்தாயிற்று. முதல் 10 வருடங்களில் நடைபெற்ற சாதனை இந்த 5 ஆண்டுகளில் நடைபெற வேண்டுமென்பது திட்டத்தின் லட்சியம். இத்திட்டத்திற்குத்தேவையான அந்நிய உதவி போதுமான அளவு கிடைக்குமென்பதில் இந்திய அரசாங்கமும் திட்டக் கமிஷனும் நம்பிக்கை கொண்டுள்ளன. 3-வது திட்டத்தில் முதலிரண்டு வருடங்களில் இந்தியாவுக்கு 1100 கோடி ரூபாய் அந்நியஉதவி கிடைக்கும்.

இந்தியாவில் ஏற்பட்டுவரும் பொருளாதார மறுமலர்ச்சியை உலக முழுதும் ஆவலுடன் கவனித்துவருகிறது. ஆசியாவில் கம்யூனிஸத்தின் வெற்றி தோல்வி இந்தியாவின் சாதனையில்தான் தங்கியிருக்கிறதென்பது அனைவரும் கொண்டுள்ள கருத்தாகும். கம்யூனிஸ்ட் சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறுவதாகக் கருதப்படும் பொருளாதாரப் போட்டி ஜனநாயகத்துக்கும், எதேச்சாதிகாரத்துக்குமிடையே நடைபெறும் போட்டியாகக் கருதப்படுகிறது.

வெளிநாட்டுக் கொள்கை

வல்லரசு முகாம்களில் இந்தியாவை இழுத்துவிட நடைபெற்ற முயற்சிகள் தோல்வியடைந்தன. நடுநிலைமைக் கொள்கையிலிருந்து அந்நாட்டைப் பிரிக்கமுடியாதெனக் கண்ட இரு போட்டி முகாம்களும் அந்நாட்டின் நல்லெண்ணத்தைப் பெறுமுகமாக வலிய உதவிசெய்ய முன்வந்துள்ளதே நேருஜியின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றிபெற்றுள்ளதற்கு அத்தாட்சி இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையைத் தான் பெரும்பாலான ஆசிய—ஆபிரிக்க நாடுகள் பின்பற்றி வருகிறதென்பதும் அதற்கு மற்றோர் அத்தாட்சியாகும். அதுமட்டுமின்றி காந்திஜீ காட்டிய சமாதான தீபத்தை உள்நாட்டில் மட்டுமின்றி உலகத்துக்கே இந்தியப் பிரதமர் காட்டிவருகிறார். பல சர்வதேசப் பிரச்னைகளில் இந்தியா ஐ. நா. வில் கடைப்பிடித்த கொள்கை தைரியமும், தீர்க்கதிருஷ்டியும் கொண்டவை. உலக சமாதானத்துக்காக அந்நாடு ஆற்றிவரும் பணி, உள்நாட்டில் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு அது கடைப் பிடித்துவரும் வழிவகைகள் ஆகியன வெற்றிபெற வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். இச்சுதந்திர தினத்தில் அந்நாடு எடுத்துக்கொள்ளும் பிரதிக்ஞை வெற்றிபெற வேண்டும் என்ற பிரார்த்தனையில் நாமும் சேர்ந்து கொள்கிறோம்.

அருணகிரிநாதர் விழா

—சர்மா—

அமிழ்தினும் இனிய திருப்புகழைத் தமிழ் உலகிற்கு அளித்த அருணகிரிநாதர் விழா இன்று அவர் பிறந்த திருவண்ணாமலையிலும், வேறு பல இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

தமிழ் மொழி அமிழ்தினும் இனியது. தெய்வத் தன்மை வாய்ந்தது. முருக பக்தரான அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் என்பனவற்றிலிருந்து இவ்வுண்மை அறிதல் கூடும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் திருவண்ணாமலையிலே தோன்றிய அருணகிரிநாதர் சிறு வயதிலே சிற்றின்ப போகத்திலே மூழ்கி, தம் சொத்தையும் இளமையையும் பாழாக்கி உலக வாழ்வினை முற்றாக நீக்கு முகமாக வல்லாளராஜன் கோபுர உச்சியினின்றும் முருகா சரணம் என தியானித்துக் கீழே குதித்தார். முருகப்பெருமான் வயோதிப வடிவங் கொண்டு அருணகிரியைத் தாங்கித் தம் அடியவனுக்கிக் கொண்டார். அருளுபதேசம் பெற்ற அருணகிரிநாதர் ஸ்ரீ முருகப் பெருமானின் கருணைப் பெரு வெள்ளத்தில் உலக மக்கள் திளைத்து ஆனந்திக்கவும், பக்திச்சுவை பெருகவும் தெய்வத் தமிழில் முருகன் புகழ் பாடும் பல பாமாலைகள் புனைந்துள்ளார். அவை அமைதியான ஆற்றொழுக்குப் போன்ற இனிமையான பக்திப் பாடல்கள். அவற்றைத் தினமும் பாராயணம் செய்வோர் மன மாசு நீங்கி அருள் சேர் பக்தர்களாக விளங்க முடியும். முருகன் அருளைப் பெற்ற அருணகிரிநாதர் தமக்கேற்பட்ட பல சோதனைகளையும் அவனருளாலே போக்கினர். தமது பாடலிலே குறைகண்டு வாதுக்கழைத்த வில்லிபுத்தூரார் என்னும் வைணவ பக்தரை 'சித்தத்' என்று தொடங்கும் திருப்புகழைப் பாடிப் பொருள் கேட்டுத் தோல்வியுறச் செய்தார். புழுவாய்ப் பிறக்கினும் புன்னியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல்' வேண்டும் என்று இறைவனை வேண்டும் நாம் சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல் வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளிக் காந்தனைக் காந்தக் கடம்பனைக் கார் மயில் வாகனனைச் சாந்துணைப் போது மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே" என்று அருணகிரிநாதர் இடித்துச் சொல்லுகிற உண்மையை நன்குணர வேண்டும். தமிழ்க்கடவுளின் நர்த்தன பாத திருக்கோலங்களைக் கண்டு பாடிய பெருமையும் அருணகிரிநாதருக்குண்டு.

அருணகிரிநாதர் விழாவை அவர் பிறந்த திருவண்ணாமலையில் இன்று சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இலங்கையிலும் பல இடங்களில் இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

இவர்கள் எங்கே?

வெல்லம்பிட்டி, திங்கள் முல்லேரியா மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஜி. விஜயதாசா, டபிள்யு. பி. சாலோசிங்கோ, ஜே. தோமஸ் சிங்கோ, கரோலிஸ், அப்புகாமி, பால்சூரியா ஆகிய ஐவர் அவ் வாஸ்பத்திரியிலிருந்து ஆஸ்பத்திரி உடையுடன் தப்பி யோடிவிட்டார்களெனத் தெரிகிறது. இவர்கள் ஐவரும் பல்வேறு நீதிமன்றங்கள்மூலம் இந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களெனச் சொல்லப்படுகிறது. வெல்லம்பிட்டிப் பொலிசார் இவர்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருட்டுவழக்கொன்றில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் 16 - யதுடைய முருகேசு கணபதிப்பிள்ளை என்பவர் தலைமறைவாக இருந்துவருவதாகத் தெரிகிறது. இவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

∴ ∴ ∴

கிரிலப்பனை, திங்கள்

இருபத்துநான்கு வயதுடைய என். சனவிரத்தினம் என்பவர் ஹம்பர் துவிச்சக்கரவண்டியொன்றினைத்திருடியதாகக் குற்றம்சாட்டப்பட்ட வழக்குச் சம்பந்தமாக கிரிலப்பனைப் பொலிசார் தேடிவருகின்றனர். இவர் தலைமறைவாகப் பொலிசுக்கு 'டிமிக்கி' கொடுத்துவருவதாகத் தெரிகிறது.

∴ ∴ ∴

மொரட்டுவை, திங்கள்

23 வயதுடைய எல். பி. சோமரத்தினு என்னும் சோமதாசா கைக்கடிகாரம் ஒன்றினை நம்பிக்கைமோசடி செய்ததாகவுள்ள வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறரெனத் தெரிகிறது. இவரை மொரட்டுவ பொலிசார் தேடிவருகின்றனர். இவர் தலைமறைவாக இருக்கிறாராம்.

∴ ∴ ∴

கம்பகா, திங்கள்

குருநாகலையைச் சேர்ந்த 29 வயதுடைய தையல்காரரான பி. எல். பிரேமதாசா கம்பகா மாஜிஸ்ரேட் கோட்டிலிருந்து தப்பியோடிவிட்டாரெனத் தெரிகிறது. வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவர் பொலிஸ் காவலில் இருந்தாரென்றும், அன்று அவ் வழக்கில் அவரைக் கோர்ட்டில் ஆஜர்செய்யக்கொண்டு போயிருந்தனரென்றும் தெரிகிறது.

∴ ∴ ∴

கொழும்பு, திங்கள்

25 வயதுடைய டபிள்யு. ஏ. விஜயதாசா, 18 வயதுடைய பியதாசா கன்னங்காரா ஆகிய இருவரையும் பொலிசார் தேடிவருகின்றனர். திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட இவ்விருவரும் மறைந்திருப்பதாகத் தெரிகிறது.

∴ ∴ ∴

வெலவா, திங்கள்

பியசேன என்ற டானித் சில்வா என்னும் 18 வயதுடைய ஒருவர் தலைமறைவாக இருந்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இவர் திருட்டு வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறரெனத் தெரிகிறது.

∴ ∴ ∴

அம்பாறை திங்கள்

சீமன் என்றழைக்கப்படும் 45 வயதான ஒருவர் திருட்டு வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறார். இவர் தலைமறைவாக இருப்பதாகத் தெரிகிறது. பொலிசார் தேடிவருகின்றனர்.

புதிதாக வேலைக்கு அமர்த்தப்பட மாட்டார்கள்

செலவுகளைக் குறைக்க அரசினர் முடிவு

கொழும்பு, திங்கள்

தொழில்நுட்ப வல்லுனர் வைத்தியர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை ஆசிரியர்கள் ஆகியோரைத் தவிர, வேறு எவரும் அரசாங்க இலாகாக்களில் இனி வேலைக்கு அமர்த்தப்பட மாட்டார்கள் எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இம் முடிவு பற்றி மத்திய தொழிற் கந்தோருக்கும், நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள தொழிற் கந்தோர்களுக்கும் திறைசேரி அறிவித்திருக்கிறது.

புதிதாக வேலைக்கு எவரையும் அமர்த்த வேண்டாமென்றும், ஊழியர்கள் குறைவாக இருக்கும் இலாகாக்களுக்கு ஊழியர்கள் அதிகமாகவிருக்கும் இலாகாவிலிருந்து மாற்றித் தரப்படுமென நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும் திறைசேரி அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் செலவைக் குறைப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன. நாட்டின் நிதிநிலைமை அபிவிருத்தி அடையாத பட்சத்தில், அரசாங்க இலாக்காக்களில் ஒருவரையும் புதிதாக வேலைக்கு அமர்த்த முடியாது.

தாத்ரா நாகர்ஹவேலி

இந்திய யூனியனுடன் இணைக்க மசோதா

புதுடில்லி, ஆகஸ்ட் 14

தாத்ரா, நாகர் ஹவேலி ஆகிய பகுதிகளை பாரத யூனியனுடன் சேர்த்துக்கொள்வதாக ஒரு மசோதா கொண்டுவருவது பற்றி பாரதப் பிரதமர் திரு. நேரு லோகசபையில் அறிவித்ததும் எல்லோரும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தார்கள். இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியென்றும், தாத்ரா நாகர் வேலி ஆகிய இடங்கள் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ்வருமென்றும் திரு. நேரு தெரிவித்தார்.

தாத்ரா, நாகர்வேலி மக்கள் போர்த்துக்கீசரை வெற்றிகண்டதை திரு. நேரு புகழ்ந்ததோடு, போர்த்துக்கீசரின கொடுமையை எதிர்த்துப் போராடும் அங்கோலா மக்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசினர்.

"ஆபிரிக்க மக்கள் போர்த்துக்கீசருக்கு எதிராக நடத்தும் போராட்டம் கோவா விடுதலைக்கு வழி செய்யாது. கோவா மக்கள்விடுதலைப்போராட்டத்தை இந்தியாவின் ஆதரவுடன் தாங்களே மேற்கொள்ளவேண்டும்" என்றார் திரு. நேரு.

சுகாதார மந்திரிக்கு பீக்கிங் விருந்து

பீக்கிங், ஆக. 14

இலங்கையிலிருந்து திரும்பிய சீனபுனித தந்தத்துடன் பீக்கிங் வந்து சேர்ந்த இலங்கையின் சுகாதார மந்திரி செனட்டர் ஏ. பி. ஜயசூரியாவுக்கும் அவரது கோஷ்டியினருக்கும் நேற்று பீக்கிங்கில் பிரமாதமான விருந்துபசாரமொன்று அளிக்கப்பட்டது.

டுனிஷியாவில் ஆர்ப்பாட்டம்

டுனிஸ், ஆக. 14

டுனிஷியாவிலிருந்து அந்நியப் படைகளை வெளியேற்றுவதற்கு டுனிஷிய மக்கள் இறுதிவரை போராடுவார்களென்பதை அறிவுறுத்தும் நோக்கத்துடன் அடுத்த வெள்ளிக்கிழமை டுனிஷியா முழுவதிலும் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

உலக ஜனத்தொகை 300 கோடி
பிறப்பு அதிகம்; இறப்பு குறைவு

நியூயோர்க், ஆக. 14

உலக ஜனத்தொகை இப்பொழுது மூன்னூறு கோடியாக அதிகரித்திருக்கிறது. ஆண்டுக்கு ஐந்தரைக் கோடி வீதம் ஜனத்தொகை பெருகி வருகிறது.

பிறப்பு விகிதம் கூடுதலாகவும் இறப்பு விகிதம் குறைவாகவுமுள்ளது.

உலக ஜனத்தொகையில் 56 சதவிகித ஜனத்தொகையைக் கொண்ட ஆசியாவில் 2 கோடி 20 லட்சத்திலிருந்து 3 கோடி 20 லட்சம்வரை ஜனத்தொகை அதிகரித்துள்ளது.

ஆசியாவில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 36 ஆகவும் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு பத்தொன்பதாகவுமிருக்கிறது. ஆபிரிக்காவில் பிறப்பி விகிதம் ஆயிரத்துக்கு நாற்பத்தேழாகவும் இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு இருபத்தெட்டாகவும் உள்ளது.

இறப்பு விகிதம் சோவியத் யூனியனில்தான் மிகவும் குறைவு. ஆயிரம் பேருக்கு எட்டுப் பேர்தான் அங்கு இறக்கிறார்கள்.

இந்த விபரம் ஐ. நா. கமிட்டி ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேர்லின் எல்லை -ரஷ்யாவுக்கு அமெரிக்கா ஆட்சேபம்

வாஷிங்டன், ஆக. 14

கிழக்கு–மேற்கு பேர்லின் எல்லையை கிழக்கு ஜேர்மன் அதிகாரிகள் மூடிவிட்டதற்கு சோவியத் யூனியனிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப்படும் என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்ரஸ்க் தெரிவித்தார்.

பேர்லின் எல்லை மூடப்பட்டது சம்பந்தமாக மேற்கு ஜேர்மனியிலுள்ள பிரிட்டிஷ், பிரஞ்சு அமெரிக்க ஸ்தானிகர்கள் நேற்று கூடி ஆலோசனை செய்தனர்.

பேர்லின் எல்லையை கிழக்கு ஜேர்மன் அதிகாரிகள் மூடியது ஒப்பந்தங்களை மீறிய செயல் என்று மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எல்லை மூடப்பட்டது சம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க மந்திரி நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் மேற்கு ஜேர்மனிக்குள் கிழக்கு ஜேர்மனியிலிருந்து அகதிகள் வராமல் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறதென்று தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஜேர்மனியிலிருந்து மேற்கு ஜேர்மனிக்கு அகதிகள் வந்து குவிவதற்கு மேற்கு ஜேர்மனியினதோ மேற்கு நாடுகளினதோ பிரசாரம் காரணமல்லவென்றும் கிழக்கு ஜேர்மனியிலுள்ள கம்யூனிஸ்ட் ஆட்சியின் கேடுதான் காரணமென்றும் திரு. றஸ்க் தெரிவித்தார்.

மேற்கு பேர்லின் மேயர் திரு. வில்லிபிராண்ட் எல்லை மூடப்பட்டது பற்றிக் குறிப்பிடுகையில் இதுபற்றி மேற்கு நாடுகள் வெறும் ஆட்சேபனையுடன் நின்றுவிடாது உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அகதிகள் நீந்திக் கடந்தனர்

பேர்லின் எல்லையை கிழக்கு ஜேர்மன் துருப்புக்கள் நேற்று மூடிக்கொண்டிருந்தசமயம் எல்லைக்கு இருபுறத்திலும் மக்கள் திரண்டு நின்றனர். இவர்களைக் கலைப்பதற்கு கிழக்கு ஜேர்மன் பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வீசினர்.

எல்லையில் மூடப்படாப்படாத சில இடங்களின் வழியாக இன்னும் சிலர் மேற்கு ஜேர்மனிக்குள் சென்றுகொண்டிருக்கின்றனர். எல்லை மூடப்படுவதை அறிந்ததும் பலர் அவசர அவசரமாக மேற்கு ஜேர்மனிக்குள் போய்ச்சேர முயற்சி செய்தனர். சிலர் ஆற்றை நீந்திக்கடந்தும் மற்றும் சிலர் கட்டடங்கள் இடிந்து சிதைந்த இடைவெளிக் குள்ளாக தவழ்ந்தும் சென்றனராம்.

தென்மேற்குக் கரையில் திடீர் சூருவளி
பாடசாலை கூரை விழுந்து 30 பேர் காயம்

தொடந்துவை, திங்கள்

தெற்குப்பகுதிக் கடற்கரையோரமாக வீசிய புயற் காற்று நேற்றுக் காலை ஹிக்கடுவையிலுள்ள பள்ளிக்கூடமொன்றின் கட்டடங்களை வீழ்த்தியது. குழந்தை நலன் பரிபாலன சேவை இலாக்காவினால் நடாத்தப்பட்டுவரும் இப் பள்ளிக்கூடம் இப்பகுதியில் அங்கீகாரம்பெற்ற ஒரு முக்கிய பள்ளிக்கூடமாகும். புயல் தாக்கிக் கட்டடம் விழுந்ததால் பதினெட்டுப்பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மற்றைய பதின்மூன்று பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

140 மாணவர்கள் வதியும் நான்கு விடுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றோடு கூடிய உத்தியோகஸ்தர்கள் வீடுகளும் சேதமடைந்துள்ளன. பள்ளிக்கூடத்தின் மின்சார ஸ்தாபனமும் பெரிதும் சேதமடைந்துள்ளது.

ஆசிரியர்களும் பள்ளிக்கூட அதிபரும் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்ததன்பயனாக நிலைமை அதிகம் மோசமாகாதிருந்தது. மழை கொட்டிக் கொண்டிருந்தபோதிலும் காயமடைந்து சேற்றில் அமிழ்ந்தியவர்கள் பாதுகாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர். காயமடைந்த பிள்ளைகளின் பெற்றோருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டது.

பள்ளிக்கூடத்தின் நிலை பரிதாபத்துக்குரிய காட்சியாக இருந்தது. செங்கட்டிகள் உடைந்தும் இரும்புக் கம்பங்கள் வளைந்தும தீராந்திகள் பறிந்து சரிந்தும்கானப்பட்ட நிலை பயங்கர புயற் கற்றை அறிவுறுத்தின.

'பாரதத்துடன் சமாதானமாக வாழவே விரும்புகிறோம்'
பாக் அதிபர் செய்தி

ராவல்பிண்டி, ஆக 14

"பாகிஸ்தான் தனது அண்டை நாடான இந்தியாவுடன் கௌரவமாகவும் சமாதானத்துடனும் வாழவே விரும்புகிறது" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான் நேற்றிரவு விடுத்த ஒரு செய்தியில் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பதினைகாவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தை யொட்டி நாட்டு மக்களுக்கு அவர் ஒரு செய்தி விடுத்தார்.

"காஷ்மீர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டால் பாரதமும் பாகிஸ்தானும் சமாதானமாகவும் நல்லுறவுடனும் வாழ முடியுமென்பதே எனது நம்பிக்கை" என்று ஜனாதிபதி அயூப்கான் கூறினர்.

காஷ்மீர் பிரச்சினையில்லாவிட்டால் கூட வேறொரு பிரச்சினையை சாட்டாக வைத்துக்கொண்டு இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் தலைவர்கள் துவேஷப் பிரச்சாரமும் செய்து வருவார்கள் என்று பாரதப் பிரதமர் நேரு சமீபத்தில் கூறியிருந்ததைக் குறிப்பிட்ட ஜனாதிபதி அயூப்கான் "இக்கூற்றுக்கு எவ்வித அர்த்தமுமில்லை" என்றார்.

கடாங்காவுக்கு காங்கோ வேண்டுகோள்

லியப்போல்ட்வில்லி, ஆக 14

காங்கோவுடன் ஒன்றுக இணைந்துகொள்ளுமாறு கடாங்காவுக்கு காங்கோ பிரதமர் திரு அடௌலா நேற்று மீண்டும் வேண்டுகோள்விடுத்தார்.

யுமும்பா ஆகரவான ஸ்டான்லிவில்லி, கீவு ஆகிய மாகாணங்கள் காங்கோவுடன் இணைந்துகொண்டதை திரு. அடௌலா குறிப்பிட்டு அந்த மாகாணங்களின் பிரதிநிதிகளுக்கு லியப்போல்ட்வில்லி அளித்த பெரும் வரவேற்புக் கூட்டமும் விவரித்தார்.

காங்கோவின் உள்ளேயும் வெளியேயும் எதிரிகள் இருக்கிறார்களென்றும் இந்த எதிரிகள் இன்னமும் சக்திவாய்ந்தவர்களாக உள்ளனரென்றும் இவர்கள் விஷயத்தில் கவனமாக இருக்கும்படியும் திரு. அடௌலா காங்கோமக்களுக்கு ஒரு எச்சரிக்கைவிடுத்தார்.

ஜோமோகென்யாட்டா விடுதலையானார்

நைரோபி, ஆக. 14

ஆபிரிக்க விடுதலை வீரர் திரு. ஜோமோகென்யாட்டா இன்று விடுதலை செய்யப்பட்டார். கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்த மராலால் என்ற இடத்திலிருந்து திரு. கென்யாட்டா இன்று நைரோபிக்கு சமீபத்தில் ஒரு விமானத்தில் வந்திறங்கினர். நைரோபிக்கு வெளியே 15 மைல் தூரத்திலுள்ள அவரது புதிய வீட்டுக்கு திரு கென்யாட்டா செல்வார்.

கென்யாவை விடுதலை செய்வதற்காக 'மௌ மௌ' இயக்கம் என்ற பயங்கர இயக்கமொன்றை ஆரம்பித்ததற்காக திரு. கென்யாட்டா பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தார். சிலகாலத்தார். முன்னர் விடுதலைசெய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தார்.

கல்வி மந்திரிக்கு அழைப்பு சீனாவின் கல்வி முறையை நேரில் அறிவார்

கொழும்பு, திங்கள்

மக்கள் சீனக் குடியரசுக் கல்வி மந்திரியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, கல்வி மந்திரி திரு. பதியுத்தீன் மாமூத், சீனாவின் கல்வித் திட்டத்தை நேரில் தெரிந்துகொள்வதற்காக மிக விரைவில் சீனா செல்ல இருக்கிறார்.

இலங்கையில் உள்ள மக்கள் சீனத் தூதுவர் மூலம் கிடைத்த அழைப்பை ஏற்றுகொண்ட கல்வி மந்திரி, பிரயாணத்துக்கான திகதியை முடிவு செய்யவில்லை. கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று கல்வி அமைச்சருடன் சீனா செல்லும்.

இலங்கையில் தேசிய கல்வித் திட்டத்தை அமைப்பதற்கு உதவி, இலங்கை அரசாங்கத்துடனும் இலங்கை மக்களுடனும் கலாச்சார கல்வித் தொடர்புகளைப் பலப்படுத்த மக்கள் சீன அரசாங்கம் ஆவலாக இருக்கிறது. கல்வி பற்றியும், கல்வி அமைப்பு விதிகள் பற்றியும் மக்கள் சீனக் குடியரசின் கல்வி அமைச்சரும், இலங்கைக் கல்வி அமைச்சரும் சௌஜன்ய கருத்துப் பரிமாறல் செய்வார்கள் என சீனா தெரிவிக்கிறது.

சென்ற வாரம் மக்கள் சீனாவின் சுகாதார மந்திரியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, இலங்கை சுகாதார மந்திரி திரு ஜே. பி. ஜெயசூரியாவும், அரசாங்க டாக்டர்களைக் கொண்ட கோஷ்டியும், சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றும் சீனா சென்றிருக்கிறது.

குருஷேவ் எச்சரிக்கை

மாஸ்கோ, ஆக. 14

ஏகாதிபத்திய நாடுகள், யுத்த மொன்றைத் தொடங்கினால், வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளிலுள்ள தளங்கள் யாவற்றையும், ரஷ்யா தூள் தூளாக அழித்து விடும் என்று திரு. நிகிடா குருஷேவ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசியல் திட்டம்

ராவல்பிண்டி, ஆக. 14

பாகிஸ்தானின் புதிய அரசியல் திட்டம்பற்றி அரசியல் திட்டக் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையை மந்திரிசபையின் உபகமிட்டி பரிசீலனை செய்து வருவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்பான் தெரிவித்தார்.

'பாடும் மீன்' கோஷ்டி சம்பியனைத் தெரிவு

காத்தான்குடி, திங்கள்

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டச் சம்மேளனத்தினர் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'பாடும் மீன்' கோஷ்டி சம்பியனைத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பலம் வாய்ந்த பாடும் மீன் கோஷ்டி, மைக்கல் மென் கோஷ்டி, யூனைட்ட் கோஷ்டி, றெயில்வேக கோஷ்டி, டைனமோஸ் கோஷ்டி என்பன பங்கெடுத்துக்கொண்டன.

பாகிஸ்தான் சுதந்திர தினம்

கராச்சி, ஆக. 14

பாகிஸ்தான் குடியரசின் பதினைகாவது சுதந்திர தினம் இன்று அதிகாலை மசூதிகளில் விசேஷ தொழுகையுடனும் 31 குண்டுகள் பிரங்கிகளிலிருந்து தீர்க்கப்பட்டதுடனும் ஆரம்பமானது.

அரசாங்க கட்டிடங்களிலும் தனியார் கட்டிடங்களிலும் தேசியகொடிகள் பறக்கவிடப்பட்டன.

பொதுக் கூட்டங்களும் பாடசாலை பிள்ளைகளின் அணிவகுப்புக்களும் சாரணர் அணிவகுப்புகளும் நடைபெற்றன.

லாகூரில் படகு ஓட்டப் போட்டியும் நடைபெற்றது.

கதந்திரத்தையொட்டி இராணுவ வீரர் பலருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

மணிவாக்கு

"தெரியாது என்று உணர்வது அறிவை அடைவதற்குப் பெரு வழியாகும்."

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆடி மீ 31உ (15-8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

இன்று இந்தியாவின் சுதந்திர தினம்

நாடு கண்டுவரும் துரித முன்னேற்றம்

— டி. எம். முருகையா —

இன்று இந்தியாவின் 14-வது சுதந்திரதினம். சுதந்திர இந்தியா தன் 14 வருட பொருளாதாரப் புரட்சியில் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுகளில் அதன் சாதனை மகத்தானதாயிருக்கும். சமீபத்தில் கையெழுத்தான 1,600 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட அந்நாட்டின் 3 வது ஐந்தாட்டுத் திட்டமே இதற்கு அத்தாட்சி.

இன்று இந்தியாவின் 14வது சுதந்திர தினம். 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி பாரதநாடு அந்நிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. இந்த 14 வருட சுதந்திரத்தில் இந்தியாவின் சாதனைகள் மிகப பெரியவை. உலகம் முழுதும் பாரத நாட்டின் சாதனையை புகழ்ந்து பாராட்டியுள்ளன.

அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் இந்தியாவின் சாதனையை விளக்குமுன் அந்நாடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பழைய வரலாறுகளை ஆராய்வது சுவாரஸ்யமானது.

முதலாவது சுதந்திரப் போராட்டம்

இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம் 1857ம் ஆண்டு ஆரம்பமாகியது என்பது சரித்திரம் உரைந்த அனைவருக்கும் தெரியும். "சிப்பாய்க் கலகம்" என பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்களால் வருணிக்கப்படும் சம்பவம் உண்மையில் அந்நிய ஆட்சிக்கெதிராக ஆரம்பமான முதலாவது சுதந்திரப் போராட்ட மேதவீர வேறில்லை.

பிரதமர் நேரு

இந்தியாவின் தேசிய ஸ்தாபனமான காங்கிரஸ் ஆரம்பிக்கப்படுமுன்பே பற்பல வடிவங்களில் அந்நிய ஆட்சிக்கெதிரான போராட்டம் ஆரம்பமாகியது. ஆனால் நாடு ஐக்கிய ரீதியிலன்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுச்சியைக் காட்டியதனால் இப்போராட்டங்கள் மிகவும் பலவீனமாயிருந்தன.

அக்காலத்தில் நாட்டில் வேர்விட்டசுதந்திர உணர்ச்சியையும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பலாத்கார கிளர்ச்சியையும் அமைதியான போக்கில் திருப்பிவிடும் முயற்சியாக காங்கிரஸ் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. காங்கிரஸ் ஸ்தாபனத்தை முதலில் ஆரம்பித்தவர் ஒரு ஆங்கிலேயர் என்பதும் ஆச்சரியமாய் இருக்கலாம். ஏ. ஓ. ஹியூம் என்னும் பிரிட்டிஷ் இந்திய அதிகாரி ஒருவரே இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்தவர்.

மகாத்மா காந்தி

இடைக்காலம்

பிற்காலத்தில் தாதாபாய் நௌரோஜிமுதல்லோகமான்ய திலகர் வரையுள்ள காலத்தை ஒரு இடைக்காலமாகக் கொள்ளலாம். இந்த இடைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பலாத்காரச் சம்பவங்கள் அனந்தம். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்ட புரட்சிக்காரர்கள் அப்போது நாடெங்கும் பெருக்கெடுத்திருந்தனர்.

பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ், சவர்க்கார், அரவிந்தர் போன்றவர்கள் பலாத்காரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்கள். ஜாலியன்வாலாபாக்கில் நடைபெற்ற "பஞ்சாப் படுகொலை" போன்ற அடக்குமுறைகளுக்கிடையே சட்டசபையில் வெடிகுண்டு வீசுதல், உயர்தர பிரிட்டிஷ் அதிகாரி கொலைப் படுகொலை செய்தல் போன்ற சம்பவங்கள் ஏராளமாக நடைபெற்றன. இச்சம்பவங்களைத் தொடர்ந்து எத்தனையோ இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர். சித்திரவதையும் நாடுகடத்தலும், இன்னும் பல்வேறு அடக்குமுறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

ஆரம்பத்தில் காங்கிரஸ் ஸ்தாபனம் பிரிட்டிஷாருக்கு தங்கள் கோரிக்கைகளைத் தாழ்வான முறையில் மனுச்செய்து கொள்ளும் ஒரு ஸ்தாபனமாகவே இருந்தது. லோகமான்ய திலகரின் காலத்தில் அது தீவிரமடைந்தது. திலகர் காலத்தில்தான் காங்கிரஸ் தீவிரவாதிகளைக்கொண்டு கோஷ்டியாகவும், மிதவாதிகளைக் கொண்ட கோஷ்டியாகவும் இரண்டாகப் பிரிந்தது.

ஒரு புதுமை

ஆனால் இந்தியாவின் சுதந்திரம் வேறு வழியில் கிடைக்க வேண்டுமென்பது காலத்தின் நோக்கம்போலும். தென்னாபிரிக்காவில் 20 வருடம் சத்தியாக்கிரகத்தை வெற்றிகரமாக நடாத்தி வெள்ளையரையே திரும்பிப் பார்க்கவைத்த சோதனையிலிருந்து புடம்போட்ட பொன்னாக இந்தியா திரும்பிய காந்திஜி தலைமைப் பொறுப்பை ஏற்றபின் சுதந்திரப்போராட்டத்தில் ஒரு திருப்பம்-ஒரு புதுமை ஏற்பட்டது. தேசிய சுதந்திரப்போரில் புதிய வழியைப் புகுத்தினார் காந்திஜி.

உலகம் கண்டிராத புதுமையாக அரசியலுடன் அஹிம்சையைக் கலந்து வழிகாட்டினார் மகாத்மா. அவரது தலைமையில் 40 கோடி இந்தியர் ஒரே குரலாக — ஒரே சக்தியாக விளங்கி தேசத் தியாகத்திலீடுபட்டது சரித்திர வரலாறாகும். வரலாற்றுப் பெருமை வாய்ந்த "பிரெஞ்சுப் புரட்சி" யைப்போல் இதையும் "இந்தியப்புரட்சி" என அழைக்கலாம். பிரெஞ்சுப் புரட்சி, கைத்தொழில் புரட்சி, அமெரிக்கப்புரட்சி, ரஷ்யபுரட்சி, ஆகியவற்றின் வரிசையில் இந்தியப் புரட்சி"யும் சேர்ந்து கொண்டது. இருதியில் 90 வருடப் போராட்டத்துக்குப் பின் இந்திய உபகண்டம் விடுதலை பெற்றது.

இவையெல்லாம் பழைய சம்பவங்கள். இப்போது 14 ஆண்டு சுதந்திரத்தில் அந்நாட்டின் சாதனைகளைக் கவனிப்போம். இந்தியாவின் முக்கிய சாதனை அந்நாடு உலகில் சிறந்த ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக்கொண்டதுமட்டுமின்றி, நாட்டில் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள

ஜனாதிபதி ராஜன்பாபு

விழிப்புணர்ச்சி எனக் கொள்ளலாம்.

தீவிர முன்னேற்றம்

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை இந்தியா வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது. திட்டமிட்ட காலத்திற்கு முன்பே முதலாவது திட்டத்தை அது நிறைவேற்றிய திறமையைக் கண்டு வெளிநாடுகள் அந்நாட்டின் உதவிக்கு வலிய முன்வந்தன. பண்டித நேரு உருவாக்கிய பஞ்சசீலத்தை அடிப்படையாகக் கொண்ட நடுநிலைமைக் கொள்கை வெளிநாட்டு உதவிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்ததெனலாம்.

நாட்டில் இப்போது தீவிரமான பொருளாதாரப் புரட்சி நடைபெற்று வருகிறது. அது அமுலாகும் வேகத்தையும், திறமையையும் கவனிக்கும் எவரும் அந்நாட்டின் எதிர்கால சுபிட்சத்தில் பெருநம்பிக்கை கொண்டுள்ளனர். இரண்டு ஐந்துவருடத் திட்டங்களில் இந்தியாவில் பல அணைக்கட்டுத் திட்டங்கள் உருவாகியுள்ளன. பஞ்சாபில் நடைபெற்றுவரும் பகராநங்கல் அணைக்கட்டு வேலை, பொறி இயல் துறையில் இந்தியாவின் வல்லமையை உலகுக்கு எடுத்துக்காட்டுகிறது. கல்கத்தாவில் ஏற்பட்டுள்ள சித்தரஞ்சன் ரயில் வே தொழிற்சாலை

(2ம் பக்கம் பார்க்க)

கல்வி, விளையாட்டுக்கள் முதலிய பல்வேறு விஷயங்களில் இரு நாடுகளும் ஒத்துழைக்க முற்படுவதாயின், தப்பெண்ணங்கள் நீங்கவும், பரஸ்பரம் நல்லுறவுகள் பலப்பட்டு, சுமுக நிலை மேம்படலாம். சுமுக நிலை மேம்படுமாயின் காஷ்மீர் பிரச்சினையும் சுமுகமாகத் தீரவும் வழி பிறக்கலாம்.

இரு நாட்டுத் தலைவர்களும் இதை நன்குணர்ந்து பொறுமையுடன், தீர்க்கதரிசனத்துடன் காரியம் செய்தால் இரு நாட்டு மக்களுக்கும் சுதந்திரம் பெற்ற பயன் கிடைக்கும். வாழ்க பாகிஸ்தான்! வாழ்க இந்தியா!

இந்தியா - பாகிஸ்தான்

நேற்று பாகிஸ்தானின் சுதந்திரதினம். இன்று பாரத நாட்டின் விடுதலை நாள். நம் அண்டையிலுள்ள இவ்விரு நாடுகளுக்கும் இச்சமயம் ஈழத்தின் சார்பாக நாம் நல்வாழ்த்துக் கூறுகின்றோம்.

இவ்விரு நாடுகளும் சுதந்திரம் பெற்று 14 ஆண்டுகளாகின்றன. அந்நியர் ஆதிக்கம் நீங்கி விடுதலை பெற்றபின் இரு நாட்டு மக்களும் பரஸ்பரம் ஒத்துழைத்து சுபீட்சமாக வாழ வேண்டியிருக்க, இன்றைய நிலைமை ஏமாற்றம் அளிப்பதாக இருக்கின்றது. மக்களின் நன்மைக்காகப்பயன்பட வேண்டிய செல்வம், ஆயுதங்களுக்கும் இராணுவத்துக்கும் வீணாகின்றன. இரு நாட்டு அரசாங்கங்களுக்கிடையிலும் நிலவும் பரஸ்பர சந்தேகமும் பீதியும் நீங்கினால்தான் இரு நாட்டு மக்களுக்கும் பொருளாதார சுபீட்சம் பிறக்க முடியும். சுதந்திரம் பெற்ற பயனையும் அனுபவிக்கலாம்.

ஆனால் காஷ்மீர் பிரச்சினை சுமுகமான முறையில் தீராதவரை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நல்லுறவு ஏற்படுவது சந்தேகம். துரதிருஷ்டவசமாக இருதரப்பினரும் இவ்விஷயமாக விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை காட்டவில்லை. ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டதன்மீது காஷ்மீர் அரங்கிலே யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. என்றாலும் இதைமீறி, எந்தச் சமயமும் யுத்தத்தீ இரு நாடுகளுக்கும் கிளம்பிவிடுமோ என்று அஞ்சும்படி இருநாட்டு உறவுகளும் மோசமாகியுள்ளது பகிரங்க ரகசியம். இரு நாடுகளும் முட்டி மோதிக் கொண்டால் அது இருநாட்டு மக்களுக்கு மட்டுமின்றி ஆசிய ஆபிரிக்க மக்களுக்கே எவ்வளவு கெடுதல் என்பதை விளக்கத் தேவையில்லை.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகளுக்கிடையில் இவ்வித பிரச்சினைகள் ஏற்படுவது சகஜம். என்றாலும் எக்காரணம் பற்றியும் இப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள யுத்தத்தில் இறங்கினால் அது தற்கொலை செய்து கொள்வதாகவே முடியும். யுத்தத்தால் பிரச்சினை தீரும் தீருவதற்கு பதில் பல புதிய பிரச்சினைகள் கிளம்பி, நிலைமை அதிக சிக்கலாகும். இருநாட்டுத் தலைவர்களுக்கும் இது தெரியாத விஷயமன்று. ஆகவே தங்களிடையேயுள்ள எந்தப் பிரச்சினையையும், பரஸ்பரம் பேச்சுவார்த்தைகள் நடத்தியே தீர்த்துக் கொள்ள முயல வேண்டும். அப்பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கு, சூழ்நிலை மேலான முறையில் இருந்தலவசியம். ஆனால் இன்றைய சூழ்நிலை பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவோ அவை வெற்றிகரமாக முடியவோ உதவியளிக்கக் கூடியதாகத் தோன்றவில்லை.

காஷ்மீர் விஷயத்தில் இரு சார்பினரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாவிடின், ஒன்று செய்யலாம். அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதைப் பற்றி ஒத்திவைத்துவிட்டு, வர்த்தகம், பொருளாதாரம், நீர்ப்பாசனம், யாத்திரை,

ஐயாறன் எழுதுவது

மண்டபத்திலிருந்து ஓர் அன்பர் எழுதுவதாவது:-

தமிழர் பிரச்சினையை யு. என். ஓவுக்குக் கொண்டு போகப் போவதாக ஒருவர் கூறி, சென்னையிலே பல பெரிய மனிதர்களிடம் "டுப்" விட்டுக் கொண்டு பணம் சேகரித்துக் கொண்டிருக்கிறார். பல பத்திரிகைகளுக்குப் பேட்டிகள் கொடுத்து பிரசுரமாகியுள்ளன.

திருநெல்வேலிக்கு நான் திரும்பியபோது அங்கு அதே ஆசாமி, ஒரு நாட்டியக் கச்சேரிக்கு ஒழுங்கு செய்துள்ளார். நோட்டீஸ் இத்துடன் வைத்திருக்கிறேன். யு. என். ஓவுக்குப் போகப் போவதாயும், அங்குள்ள பெரிய தலைவர்களுக்கும், மசாராணிக்கும் கடிதங்கள் போட்டிருப்பதாயும் கூறி அவர்களிடமிருந்து வந்த பதிலையும் என்னிடம் காட்டினர். தமிழர்களின் தலைவர் தானே தான் என்று பிரசாரம் செய்து வருகிறார்" என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

* *

கடிதத்தில் வைத்துள்ள நோட்டீஸில், "இலங்கை தமிழர் நிதிக்காக நெல்லியில் ஒரே ஸ்பெஷல் நாட்டியம்" என்று குறிப்பிட்டு, பிரபல சினிமா நட்சத்திரம் பத்மினி பிரியதரிசினியின் பரதநாட்டியமும் ஓரியண்டல் நடனங்களும் நடைபெறுமென்றும், தமிழ் மக்கள் ஆபத்திலிருந்து நீங்க வேண்டுமாயின், ஐ. நா. சபையின் ஆதரவு பெற நியூயோர்க் செல்ல வேண்டுமென்றும், அதற்கு பொருள் உதவி அவசியம் தேவையென்றும் இதற்கான உதவியும் ஆதரவும் அளிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்!

"உதர நிமித்தம் பகுவித வேஷம்" என்று வசனமுண்டு. இந்த ஒரு சாண் வயிற்றைக் கழுவ எவ்வளவோ பேர் எவ்வளவோ வேஷங்கள் போடுகிறோம். அதில் இது ஒன்று.

முன்னர் ராஜாஜியிடம் கூடச் சென்று இவர் பண உதவி பெற முயன்றதாயும், அவர் சந்தேகித்து, அம்பலப்படுத்திவிட்டதாயும், இப்போதும் தென்னாட்டிலே இவர் பண வசூலுக்குச் செய்யும் முயற்சி அவ்வளவாகப் பலிக்கவில்லை என்றும் கேள்விப்பட்டேன்! பாவம்!

கொழும்பிலே காந்தி உருவச் சிலை வைக்கப்போவதாகக் கூறி ஒருவர் பல்லாயிரக் கணக்கில் வசூலித்தாராம். ஆனால் இதுவரை கேள்வி முறையில்லை.

மகாத்மாகாந்தியும், தமிழ் மொழியும் இப்படியும் சில ருக்குப் பயன்படுகின்றனரல்லவா?

* * *

யாழ்ப்பாணத்திலே ஒரு சப் போஸ்டாபீஸில் ஞாயிற்றுக் கிழமையன்று தமிழில் தந்தி அடிக்க ஓர் அன்பர் விரும்பினராம். விடுமுறை நாளில் அந்த வசதி கிடையாதென்று அங்கிருந்தவர் மறுத்துவிட்டாயும், பின்னர் மேலதிகாரியை விசாரித்ததில், எல்லா நாட்களிலும் தமிழில் தந்தி அனுப்பலாமென்று தாம் அறிந்ததாயும் அந்த அன்பர் தெரிவித்து, இதைப்பற்றி வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்றும் கேட்கின்றார்.

தமிழில் தந்தி அடிக்க அரசாங்கம் வசதியளித்தும், சில சிப்பந்திகள், இதுபற்றி அசமந்தமாக இருப்பது உண்மையாயின் அது பெரிதும் கண்டிக்கத் தக்கது. இந்த மாதிரி இனி நடவாதெனறே நம்புகிறேன்.

* * *

தந்தி என்றதும், திருச்சியிலிருந்து நான் வருவதாக அடித்த ஒரு தந்தி ஞாபகம் வருகிறது. நான் இங்கு வந்து

(5ம் பக்கம்பார்க்க)

இலட்சுமித்தோட்ட விசாரணை

"கல்லெறி விழுந்ததாக தகவல் கிடைத்தது"

தோட்டத்துரை சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

இலட்சுமித் தோட்டத் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடத்திவரும் விசாரணைக் கமிஷன் சென்ற வெள்ளிக்கிழமை ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டுத் திரும்பிய பின்னர் சனிக்கிழமை மீண்டும் விசாரணையை ஆரம்பித்தது. சனிக்கிழமை இலட்சுமித் தோட்டத்துரை திரு. ஹார்லி சாட்சியமளித்தார்.

திரு. ஜயவிக்கிரமாவின் கேள்விகளுக்குத் திரு. ஹார்லி பதிலளிக்கையில், பின்வருமாறு தெரிவித்தார். தான் 1949ஆம் ஆண்டு இலட்சுமித் தோட்டத்துக்குச் சென்றபோது, தோட்டத்தில் 3 பகுதிகள் இருந்ததாகவும், மூன்றிலும் தேயிலையே பயிரிட்டிருந்ததாகவும் கூறினார். தோட்டத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தொகை 800 ஆக இருந்ததென்றும் அவர்களில் 700 பேர்கள் தமிழராக இருந்ததாகவும் குறிப்பிட்டார். தான் சென்ற போது தோட்ட வருமானத்தில் இலாபம் இருக்கவில்லை என்றும், காங்கிரஸ் யூனியன் ஒன்று தோட்டத்தில் ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினார்.

இந்தக் கட்டத்தில், கடந்த 20 வருடங்களாகத் தோட்ட வருமானத்தில் ஏற்பட்ட இலாப அறிக்கையைத் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கமிஷனர் கேட்டுக் கொண்டார்.

திரு ஹார்லி தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் தான் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் போது தான் தோட்டத் தொழிலாளி ஒருவரை வேலையில் இருந்து விலக்கியதாகத் தெரிவித்தார். அத் தொழிலாளி தீவிர காங்கிரஸ்வாதி என்றபடியாலும் இதர தொழிலாளிகளைத் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராகத் தூண்டிவிடுவதாலும் வேலை நேரங்களில் தோட்டத்தில் விறகு பொறுக்குவதாலும் தான் வேலையை விட்டு நீக்க வேண்டியிருந்தது என்று விளக்கினார். தொடர்ந்து சாட்சியமளிக்கையில் 1958ஆம் ஆண்டு தேயிலைக் கொழுந்து பறிப்போருக்கு போனஸ் கொடுக்கும் வழக்கத்தை ஆரம்பித்ததாகவும், இலங்கையில் முதன் முதலாக இலாபத்தை முன்னிட்டுத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கும் வழக்கம் லக்ஷ்மித் தோட்டத்திற்தான் இருப்பதாகவும் திரு. ஹார்லி குறிப்பிட்டார். மற்றைய தோட்டங்களில் இலாபம் ஏற்பட்டதற்குக் கொடுக்கும் போனஸ் தோட்ட நிர்வாகச்சபை அங்கத்தினருக்கும் மாத்திரம் தான் கொடுக்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

திரு. ஹார்லி தமது சாட்சியத்தில் 1959ம் ஆண்டு அக்டோபர் 9ந் திகதி கணக்கப்பிள்ளை சேகு தாவுத் மற்றும் இருவருடன் தன்னிடம் வந்து தன்னைத் தொழிலாளிகள் சிலர் தாக்க வருவதாகத் தெரிவித்ததாகக் கூறினர். இச்சம்பவத்திற்கு முன்னர், ஒருதரம், செல்லையா என்பவர் பெருமாள் கங்காணியைத் தாக்கியதாகவும், இச் சம்பவம் பற்றிப் பொலிசார் ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் திரு. ஹார்லி குறிப்பிட்டார்.

கமிஷனர்: நீங்கள் தொழிலாளரை ஆபிஸுக்கு அழைத்து, அவர்களை அடிப்பது என்பதுதான் பொதுவான குற்றச்சாட்டு.

சாட்சி: தொழில் இலாகாவிலோ அல்லாது பொலிஸிலோ எனக்கெதிரான குற்றச் சாட்டுக்கள் கிடையாது.

கமிஷனர்: நீங்கள் முகத்தில் அடித்ததுண்டா?

சாட்சி: இல்லை.

திரு. ஹார்லி தொடர்ந்து சாட்சியமளிக்கையில், 22ம் திகதி தோட்டக்காவற்காரர் கட்ட தினத்தன்று, தோட்டத்தில் இருந்த நெருக்கடியான நிலைமைபற்றிய கடிதம் ஒன்றை பிரத்தியேகமாக ஒருவரிடம் கொடுத்து பெம்லிஸுக்கு அனுப்பியதாயும், அந்தக் கடிதத்தில் தொழிலாளர் ஒருதுப்பாக்கி வைத்திருப்பதாகவும், கலகம்வரக்கூடுமென்றும் அதைத் தடுப்பதற்கு தானும் 8 காவற்காரர்களை இருவர் துப்பாக்கி சகிதமாக நியமிக்கப் போவதாகவும் குறிப்பிட்டிருந்ததாகத் தெரிவித்தார். பொலிஸ் இதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று திரு. ஹார்லி தெரிவித்தார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த தினத்தன்று, கணக்கப்பிள்ளை வீட்டிற்கு தொழிலாளர் கல்லால் எறிவதாக டெலிபோனில் செய்தி கிடைத்ததாகவும், உடனே துப்பாக்கிச் சகிதம் நின்ற காவற்காரர் கருணத்திலக்காவும், அஞ்ஞேலிசையும் ஸ்தலத்திற்கு விரைந்து என்ன நடக்கிறது என்று பார்க்கவயிடச் சொன்னதாகவும் திரு. ஹார்லி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினர். மாலை 7-30 மணிபளவில் காவற்காரர் திரும்பி வந்து, தொழிலாளர் கல்லால் தாற்கியதால் தாம் சுட்டதாகவும் தெரிவித்ததின் நிமித்தம், தான் பொலிஸுக்கு போன் செய்ததாகவும், தொடர்ந்தாற்போல் கூக்குரல் சத்தம் கேட்டதாகவும் தொழிலாளர் முன்னேறி வந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் குறுக்கு விசாரணை செய்த போது காவற்காரர், சண்முகம், முத்தையர், பெரியண்ணன் ஆகியோரை பங்களாவுக்கு கொண்டுவந்ததாகவும், இவர்கள் காவர்காரர் சுடுவதற்குமுன்னர், கல்லெறிந்து ஒரு காவர்காரனுக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் தோட்டத்துரை திரு. ஹார்லி தெரிவித்தார்.

—

பிரதமராவதே நிதிமந்திரியின் நோக்கம்

கொழும்பு, திங்கள்

"நிதி மந்திரியின் குறிக்கோள்களில் ஒன்று, பிரதம மந்திரியின் கதிரையில் தாம் அமரவேண்டும் என்பதே." இவ்வாறு 1953-ம் ஆண்டு ஹர்த்தால் நிதத்தை முன்னிட்டு கம்பஹா லங்கா சமசமாஜ கட்சி வாலிப சங்கத்தால் நடத்தப்பட்ட கூட்டமொன்றில், அகலவத்தை எம். பி. திரு. அனில்முனசிங்கி பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அண்மையில் தான் நிதி மந்திரி, ஒரு பண்டாரநாயக்காவாக மாறினர் என்றும் தற்செயலாகத தான் அவர் அதிகாரத்திற்கு வந்தார் எனவும் தெரிவித்தார்.

டாக்டர் என். எம். பெரேரா பேசியதாவது 1953-ம் ஆண்டு ஹர்த்தால்தான், இலங்கையில் புதியதொரு சமுதாயம் ஆரம்பமாவதற்கு அடி கோலி வைத்தது. இதனாலேதான் காலம் சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் அதிகாரத்திற்கு வரமுடிந்தது.

"1953-ம் ஆண்டில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தமது ஆறு ஆண்டுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். அதில், ஐக்கிய தேசியக் கட்சி எல்லோருக்கும் வேலையும், போதிய உணவும் அளிப்பதாக வாக்களித்திருந்தது. அதைத் தொடர்ந்து அரிசியின் விலையும் 75 சதமாக உயர்த்தப்பட்டது.

திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்கா, இன்றைய பொருளாதார நிலை சீர்கேடாக இருக்கிறது என்று கூறிவிட்டு மாவின் விலையை அதிகரித்து விட்டார். அடுத்த வருடத்தில் அரசாங்கம் அரிசியின் விலையையும் உயர்த்தக் கூடும்.

"புதிய வரவு—செலவு திட்டத்தினால் கிராம மக்கள் பாதிக்கப்பட வில்லை என்று திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். ஆனால் அது தவறு அப்படியானால் கிராமமக்கள் மாவு, சீனி, பருண் ஆகியவற்றை உபயோகிப்பதில்லையா?"

"எறிகுண்டு விழுந்ததும் குனிந்துகொண்டேன்"

பலாலி கலவர வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சட்ட விரோதமாகக் கூடியதாகவும் கலகம் செய்ததாகவும் காயம் விளைவித்ததாகவும் காருக்குச் சேதம்உண்டுபண்ணியதாகவும் குற்றம் சாட்டி பலாலியைச் சேர்ந்த கோவிந்தர் வேலுப்பிள்ளை, நடேசராசையா, மார்க்கண்டு சின்னத்துரை செல்லையா ஆறுமுகம், சின்னப்பொடி இராமலிங்கம், சின்னான் எல்லுப்போலை, சுப்பர் கந்தையா, கந்தையா செல்லப்பா, வேலாத்தை ஆறுமுகம், வேலு செல்லத்துரை ஆகியோர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரானர்.

1, 3, 5, 6. 7-ம் எதிரிகளின் சார்பில் திரு. ஏ. நித்தியானந்தத்தின் அனுசரணையுடன் திரு. ஈ. பி. சத்துருகுலசிங்கமும் திரு. வி. காராளசிங்கமும், ஆஜராளர்கள்.

2, 4, 8-ம் எதிரிகளின் சார்பில் திரு. ஏ. நித்தியானந்தனின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர். 10-ம்எதிரியின்சார்பில்நி ரு.ஏ. நித்தியானந்தனின் அனுசரணையுடன் திரு. வி. காராளசிங்கம் ஆஜரானர்.

பலாலியிலுள்ள ஒரு கடை முதலாளி திரு. எஸ். செல்லப்பா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

1959-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ந்திகதி நான் காரில் சென்றுகொண் டிருந்தேன். என்னுடன் பொன்னுத்துரையும் இருந்தார். இராசதுரை காரைச் செலுத்தினர். அந்தக் கார் என்னுடையது. நாங்கள் அச்சுவேலியில் புரக்டர் குணரத்தினத்திடம் சென்று விட்டு இரவு 9-30 அல்லது 10 மணியளவில் திரும்பிவந்து கொண்டிருந்தோம். நாங்கள் ஒழுங்கைக்குள் வந்துகொண் டிருந்தபோது பத்து எதிரிகளும் அங்கு நின்றதைப் பார்த்தேன். தென்னங்குத்தி யொன்று போட்டுக்கிடந்தது. காரின் முன் ஆசனத்தில் சாரதிக்கு அருகில் நான் உட்கார்ந்திருந்தேன். தென்னங்குத்திக்குச் சமீபத்தில் சென்றதும் இரு கைக்குண்டுகள் வீசப்பட்டன. குண்டுகள் விழுந்ததும் நான் குனிந்துகொண்டேன். ஏழு, எட்டுத் தடவைகள் வெடிச்சத்தமும் கேட்டது. வேலுப்பிள்ளையும் சாரதியும் குத்தப்பட்டனர். முதல் எதிரி வேலுப்பிள்ளையை வெட்டினர். 10-வது எதிரி சாரதியைக் குத்தினர். பொன்னுத்துரையையும் வேலுப்பிள்ளையையும் "வாங்கடா" என்று சொல்லிக் கொண்டு நான் வெளியே இறங்கிப் போனேன். ரநான் இறங்கியதும் ஒருவரையும் காணவில்லை. 4-ம் 5ம் எதிரிகள் துப்பாக்கி வைத்திருந்தனர். துப்பாக்கியால் அவர்கள் சுட்டதை நான் பார்க்கவில்லை.

சாட்சியை திரு. சத்துருகுலசிங்கி குறுக்குவிசாரணை செய்தார். விசாரணை நடைபெறுகிறது.

—

நிதிமந்திரியின் சோஷலிசம் பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டாது

கொழும்பு, திங்கள்

திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனா 1953-ம் ஆண்டு தொழிலாளரின் உணவில் மண்ணை அள்ளிப்போட்டார் இப்பொழுது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஏழைகளின் வாயில் இருந்த உணவையே பறித்துவிட்டார்" என்று டாக்டர் என். எம். பெரேரா 1953-ம் ஆண்டு ஹர்த்தால் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஒரு மாபெரும் கூட்டத்திற் பேசும் போது தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

சோஷலிசம் என்ற பெயரில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்களைப் பேய்க்காட்டப் பார்க்கின்றது. முதலாளித்துவ அடிப்படையில் அவர்கள் எதிர்பார்க்கும் சோஷலிசம் தொழிற்படமாட்டாது. நிதிமத்திரி பண்டாரநாயக்காவின் சோஷலிசம் மக்களின் கஷ்டமான பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டாது. எகிப்து, கியூபா ஆகிய நாடுகளை இந்தவிஷயத்தில் இலங்கை பின்பற்றலாம்.

—

ஆற்றில் குதித்தார் ஆனந்தன்

ராஜஸ்ரீயைக் காப்பாற்ற

விஜயபுரிவீரன் ஆனந்தன் காவேரி ஆற்றங்கரை ஓரத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது தூரத்தில் ஒரு பெண் ஆற்றில் குதிப்பது தெரிந்தது.

உடனே பாய்ந்து சென்றார் ஆனந்தன். ஆற்றில் குதித்தார். அந்தப் பெண்ணைத் தூக்கினர். அவ்வளவுதான். அவள் ஆய் ஊய் என்று கத்தினாள். கெட்ட நினைவில் தன்னைக் கட்டிப் பிடிக்கிறான் என்று தப்பாக எண்ணிவிட்டாள் அவள்.

துடுஅவள்சத்தத்தைக்கேட்டதும் அருகில் இருந்தோர்கள் ஓடி வந்தார்கள். ஆனந்தனை வளைத்துக் கொண்டார்கள்.

ஆனந்தனின் உண்மை வாழ்க்கையில் நடந்தது அல்ல. எம். ஏ. வி. பிக்சர்சாரின் செங்கமலத்தீவு படத்துக்காக சேலத்தை அடுத்த ஓமலூர் என்ற இடத்தில் படம் றுக்கப்பட்ட காட்சி.

இதில் ஆனந்தன் காப்பாற்றும் நாட்டுப் பெண்ணை ராஜஸ்ரீ நடிக்கிறார். மற்றும் கள்ளப்பார்ட் நடராஜன் கலாவதி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

—

அலெக்லியின் டைரக்டர் காலமானர்

புகழ்பெற்ற இந்தியத்திரைப்பட டைரக்டர் நந்தலால் ஜஸ்வந்த்லால் பம்பாயில் காலமானர்.

ரசிகர்களின் பேராதரவைப் பெற்று வெற்றியடைந்த "அனர்கலி" "நாகின்" "காதம் பரி" ஆகிய படங்களை டைரச்ட் செய்த நந்தலால் ஜஸ் வந்த்லால் முழு நீளப் படமான தாஜ் மகாலை டைரக்ட் செய்து வந்தார்.

"அந்நியவங்கிகள் தோட்டங்களை தேசியமயமாக்கவேண்டும்"

யாழ்ப்பாண பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

அறுபது வீதமான முதலீட்டைக் கொண்ட வெளிநாட்டவருக்குச் சொந்தமான வங்கிகளையும், வெளிநாட்டவருக்குச் சொந்தமான தோட்டங்களையும் உடனடியாக தேசியமயமாக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணப் பிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கீழ்வரும் தீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப்பட்டன:-

கீழ்மட்டத்திலுள்ள மத்திய தரமக்களுக்கு பெரும்பளுவை ஏற்றும் தேசிய அபிவிருத்தி வரி உடனடியாக மாற்றியமைக்கப்படவேண்டும்.

தனிநபர் வருமானக் கட்டுப்பாடு ரு. 3000 என்று பட்ஜட் நிர்ணயித்துள்ளது. அளவுக்கு அதிகமான இந்த சலுகை மாற்றப்பட்டு, இத்தொகை ரு.2000 க்குக் குறைக்கப்படவேண்டும்.

சீனி, மாவு, தீப்பெட்டி விலைகளில் ஏற்பட்டுள்ள உயர்வு உடனடியாக வாபசாகவேண்டும்.

இப்புதிய வரவுசெலவுத்திட்டத்தில் முன்றிலொரு பங்கு தேசிய அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பதை இச்சங்கம் வரவேற்றிருக்கிறது.

பாவனையாளர்களையும், நேர்மையான வியாபாரிகளையும் கொள்ளலாபம் அடிப்போர், கள்ளமார்க்கட் வியாபாரம் செய்வோர் ஆகியோரையும் காட்டிக்கொடுப்பதில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு இச்சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் முக்கியமான இடங்களில் கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையங்களைத் திறந்து கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை வாங்க உதவி செய்யுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டது.

—

ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மறுநாளே மெதுவாக என்கைக்கு அது கிடைத்தது!

கொழும்பிலிருந்து வரும் தந்திகளே இப்படித் தாமதமாகையில், இந்தியா தந்திகளைப் பற்றிக் கூறத் தேவையில்லை. பல தந்திகளை "தபால் மூலம்" என்று குறிப்பிட்டு அனுப்புகிறார்கள். அதிக நெருக்கடியில் இப்படிச் செய்யவேண்டி ஏற்படலாம்தான். ஆனால் தந்திக்காக வாங்கிய பணத்தைத் திருப்பித் தந்து விடுவதே நியாயமல்லவா?

* * *

செல்வச்சந்நிதியிலிருந்து ஓர் அன்பர் வந்தார். அங்கு கொடியேற்றத் திருவிழாவன்று இது வரை என்றுமில்லாதபடி பெருங் கூட்டமாம்! சுகாதார முறைகளைக் கவனிக்கத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளதென்று தெரிவித்தார்.

பதுளை பாடசாலையில் தமிழ்ப்பேச்சு போட்டி

பதுளை, திங்கள்

பதுளை ஸ்ரீ சித்தார்த்த பாடசாலையின் மாணவ மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ் பேச்சுப்போட்டி பாடசாலை மண்டபத்தில் மன்றப் போஷகர் திரு. க. ஆறுமுகம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

மத்தியஸ்தர்களாக செல்வி எல். டி. நடுவில் தம்பி, செல்வி புஸ்பா பொன்னையா, செல்வன் எம். ஆர். சரீப் ஆகியோர் கடமையாற்றினர்கள்.

போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம்.

மத்திய பிரிவு:- செல்வன் ச. பெரியண்ணன், செல்வன் கொ. பழனிவேல், செல்வன் இ. வரதராசா, செல்வன் வீ. கந்தையா, செல்வன் பெ. தங்கவேல், செல்வன் பால்ராஜ்.

கீழ்ப்பிரிவு:- செல்வன் இ. சோமசுந்தரம், செல்வன் அ. நாகலிங்கம், செல்வன் வ. சிவஞானம்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தலைவர் புத்தகங்களைப் பரிசாக வழங்கினர்.

ஜோர்டான் மாஜி பிரதமர் விடுதலை

அம்மான், ஆக. 14

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஜோர்டானின் முன்னாள் பிரதமரை ஜோர்டான் அரசாங்கம் நேற்று விடுதலை செய்தது.

புத்தம் புதிய சரக்குகள்!
விசேஷமாக வரவழைக்கப்பட்டவை!

"மாலா" MALA

மணிப்புரி சேலைகள்

- பலரக கலர்களில் பூவேலைகள், பவுண் வெள்ளி வேலைப்பாடுகள் செய்யப்பட்டவை.
- மிக அழகானவைகளும் பார்க்கக் கவர்ச்சியுடையனவும்.
- சேலைக்கேற்ற ரவுக்கைத்துண்டுகளுடன் கூடியது.

விலை ரூ. 95-00 தொடக்கம்

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்

No. 4

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள

அலுமீனியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.

J. D. 3

நாட்டில் நேர்மையும் ஒழுக்கமும் குன்றுகின்றன

பரிசளிப்புவிழாவில் திரு. கனகரத்தினம் விரிவுரை

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற ஒருவருட காலத்தில் கல்வித்துறையில் அழிவு உண்டாக்கும் பெரிய மாற்றத்தை இந்நாடு அனுபவித்திருக்கிறது. மதஸ்தாபன பாடசாலைகளுக்கு வந்துள்ள பேராபத்தைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். இவ்வாறு முன்னாள் கல்வி மந்திரி திரு. க. கனகரத்தினம் வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற் பேசும்போது குறிப்பிட்டார். இவ்விழா சனிக்கிழமை நடைபெற்றது. திரு. கனகரத்தினமும் திருமதி கனகரத்தினமும் முக்கிய விருந்தினராக விளங்கினர்.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். செல்லையா தமது அறிக்கையிற் குறிப்பிட்டதாவது:

"தமிழினத்துக்கும் மதஸ்தாபன பாடசாலைகளுக்கும் ஆபத்து நிறைந்த இந்தவேளையில் எனது அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். பொதுவாக அரசாங்கத்தின் கொள்கைகளிலும் சிறப்பாகக் கல்வித்துறையிலும் எத்தனையோ மாற்றங்கள ஏற்பட்டுவிட்டன. கல்வித்துறையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் எதிர்பாராதமுறையில் விரைவாக வந்தன. எனவே இம் மாற்றங்களும் புதிய திட்டங்களும் நன்கு ஆராய்ந்தபின் எழுந்தனவா என்ற கேள்வி எழுகின்றது. இரு புதிய கல்வி மசோதாக்கள்மூலம் அரசாங்கம் கல்வித்துறையில் ஏகபோக உரிமையைப் பெற்றுள்ளது. எதேச்சாதிகாரம் நிலவும் நாடுகளில்தான் இக்கொள்கைகள் நிலவுகின்றன. ஜனநாயக நாடுகள் இத்தகைய வழிகளைப் பின்பற்றுவதேயில்லை.

அதிபர் திரு. செல்லையா தமது ஆரம்ப உரையில் கல்லூரிப் பழைய மாணவரான திரு. கே. கனகரத்தினம் நாட்டுக்கு ஆற்றிய நற்பணிகளைப் பாராட்டியதோடு, இத்தகைய ஒரு வைபவத்துக்குக் கல்லூரியின் பழைய மாணவரும் அவருடைய மனைவியும் முக்கிய விருந்தினராக விளங்குவது இதுவே முதன்முறையாகுமெனவும் அவர் குறிப்பிட்டார். திரு. கனகரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:

மதஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பகாலத்திலிருந்தே நமது நாட்டின் கல்வாழ்வில் முக்கிய பங்கு எடுத்திருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் அநேகமாகக் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களாகவே இருந்தன. சமீபகாலத்திலே தான் கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும் பள்ளிக்கூடங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள் பெரிய மனிதர்களையும், தலைவர்களையும் உருவாக்கியிருக்கின்றன. கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் கல்வி பயின்ற இப்பெரியார்கள் தங்கள் சொந்த மதக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் இருந்தார்கள்.

இளைஞர்கள் பிரச்சினை

இன்று எமது இளைஞர்களை எத்தனையோ பிரச்சினைகள் குறுக்கிட்டு நிற்கின்றன. நான் பலகாலமாக இன மத வேறுபாடின்றி சகல வித மானவர்களுடனும் பழகிவந்திருக்கிறேன என்னது மனச்சாட்சிக்கு மாறாக மிகக் குறுகிய எல்லைக் கோட்டுக்குள் நின்று, குறிப்பாக யாழ்ப்பாண இளைஞர்களின் பிரச்சினைகளைப் பற்றி பிரஸ்தாபிப்பது வருத்தத்தைத் தருகிறது. கிறிஸ்த மதப் பிரசாரகர்கள் முதலில் வடபகுதியில் குடியேறினர்கள் நாட்டின் ஏனைய பாகங்களை விட, இங்கு பல பள்ளிக்கூடங்களை கிறிஸ்தவமதப் பிரசாரகர்கள் அமைத்தார்கள். இதனால் தமது இளைஞர்கள் எந்த விதக் கஷ்டமுமின்றி தமது திறமையினால் அரசாங்க உத்தியோகங்களில் நல்ல முறையில் பிரவேசிக்க முடிந்தது. எந்த விதப் பாகுபாடுமின்றி தமிழினத்தின் பண்புக்கும், மரபுக்கும் ஏற்ப அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் நம்பிக்கையுடனும், திறமையுடனும் சேவை செய்து வந்தோம். அரசியலிலும், பொதுச் சேவையிலும் நாட்டின் நல் வாழ்விற்காகவும், பொது நன்மைக்காகவும் அதிகமாக உதவியுள்ளோம், துரதிருஷ்ட வசமாகச் சுதந்திரத்துக்குப் பிறகு நாளதோறும் உத்தியோகங்களுக்கான வசதிகள் குறைந்து வருவதோடு, நமது முன்னேற்றத்தில் பல முட்டுக்கட்டைகளும் தோன்றுகின்றன.

ஒழுங்கும் கட்டுப்பாடும்

இனி இளைஞர்களும் கட்டுப்பாடும் என்ற விஷயத்துக்கு வரவிரும்புகிறேன். என்றுமில்லாத அளவிற்கு சகலதுறைகளிலும் இன்று தில்லுமுல்லுகள் புகுந்துவிட்டன என்பது மறுக்க முடியாத உண்மை. விடாப்பிடியாக மக்கள் நடத்திய போராட்டம் காரணமாக, பார்லிமெண்ட் எம். பி. க்களுக்கும், இரண்டு மாஜி மந்திரிகளுக்கும் எதிரான லஞ்சக் குற்றச்சாட்டுகளை ஆராய கமிஷன் ஒன்று நிறுவப்பட்டது. பெரிய அரசாங்க இலாகா ஒன்றில் உள்ள லஞ்ச ஊழல்களை விசாரிக்க மற்றொரு கமிஷனும் நிறுவப்பட்டது. 22 உயர்தர அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். பொதுவாக எல்லா அரசாங்க இலாக்காக்களிலும் குற்றங் குறைகளை விசாரிக்க எப்போதும் ஒரு கமிஷன் இருக்கும். வர்த்தக உணவுப் பகுதியில் ஏமாற்றலும், நேர்மையீனமும் இருப்பதாக புகார்கள் வருகின்றன. வியாபாரத்துக்கென்று வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களில் கலப்படம் இருப்பதாக அவற்றை உபயோகிப்போர் கவலைப்படுகிறார்கள். வெளிநாட்டுப் பொருள்களுக்கு தடை போட்டு, வரியை உயர்த்தியவுடன், வியாபாரிகள் உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து காலப்போக்கில் கள்ள விலைக்கு விற்கப்போகிறார்கள். பொதுவாக எமது நாட்டில் ஒழுக்கம் மிக கீழான நிலையில்தான் இருக்கிறது.

பல்கலைக்கழகம்

நாட்டைப் பாதித்துள்ள பிரச்சினைகளுக்கு முடிவுகாணாமல் தர்மசங்கடப்படும் நேரத்தில், மாணவர்களின் ஒழுக்கத்தைக் குறைப்பதற்கு இலங்கைப் பல்கலைக்கழகம் தன் உணர்வின்றியே உதவிக் கொண்டிருக்கிறது, பல்கலைக்கழகம் பெருவாரியான வெளிமாணவர்களுக்கு பயிற்சி அளித்து வந்துள்ளன. வாழ்க்கையின் வயிற்படியில் அடியெடுத்து வைத்துள்ள இளம் ஆண்—பெண்கள் வெளியே தங்குவதற்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. பத்திரிகைச் செய்திகளின்படி வெளிமாணவர்கள் குடிசைகளிலும், சேரிகளிலும் நெருக்கமான இடங்களில் தங்கள் சுயமரியாதைக்கும் கௌரவத்துக்கும் எந்தவித பாதுகாப்பு மில்லாமல் இருந்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் கண்முன் இவர்களுடைய சகாக்களும் மனிதனுக்கு கிடைக்கக்கூடிய சகல வசதிகளுடனும் பல்கலைக்கழக விடுதிகளில் இருந்து வருகிறார்கள். அரிவைப் பெறுவதற்கு எந்தவிதக் கஷ்டத்தையும் அனுபவிக்க மாணவர்கள் கொண்டுள்ள தைரியத்தை மெச்ச வேண்டும். எதிர் காலத்தில் மாணவர்களின் உடல் நலனுக்கு இந்தவிதமான இருப்பிடங்கள் கேடு விளைக்கும் என்பது தெரிந்திருந்தும் பல்கலைக்கழகம் சரியான காரியத்தைச் செய்கிறதா?

கள்ளிறக்கும் தொழிலாளரின் விசா வினை நீக்க கோரிக்கை

மத்துகம, ஞாயிறு

இந்த நாட்டு அரசாங்கத்திற்கு பெருவாரியான இலாபம் தேடித் தருவது கள்ளிறக்கும் தொழிலாளர்கள். அவர்கள் செய்யும் தொழில்பற்றி எண்ணிப் பார்க்கும்பொழுது அவர்களுக்குக் கருணை காட்டுவதுடன், அவர்களால் எடுக்கப்படும் கள்ளுக்குக் கட்டண விகிதத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டியதிருக்க அவர்களின் தலையிலே விசா வரியைச் சுமத்தியிருப்பது நியாயமல்ல.

அ. இ. கள்ளுத் தொழிலாளர் யூனியன் கூட்டம் வாதுவைப் பகுதியில் ஜம்புகாவத்தையில் யூனியன் பிரதிநிதி கே. இராமசாமி தலைமையில் நடைபெற்ற பொழுது தலைவர் எம். ஜி. மெண்டிஸ் மேற்கண்டவாறு கூறினர்.

"இந்த நாட்டில் விதேச முதலாளிகள் பலருள்ளனர். அவர்கள் இங்கு கிடைக்கும் இலாபத்தை வெளிநாடுகளுக்குத்தானே கடத்திச் செல்லுகிறார்கள். அவர்களிடத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வரியாக பெறத் தவறியது ஆட்சியாளரின் திறமையின்மையேயாகும். அதோடு இலட்சக்கணக்கில் சம்பாதிக்கும் முதலாளிக்கும் ரூபாய் 400 தான் விசா வரி. 100 ரூபாய் சம்பாதிக்கும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் ரூபாய் 400 தான் விசா வரி. அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கே தடுமாறும் ஏழை மக்களுக்கு விசா வரி விதித்திருப்பது பொது மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் செய்யும் துரோகமேயாகும்." என்று திரு. மெண்டிஸ் கூறினர்.

நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு விசா வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கும் இந்த அரசாங்கம் ஏன் கள்ளுத் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்று அவர் கேட்டார்.

சாராய விநியோக பட்டினசபை கோரிக்கை

பானந்துறை, திங்கள்

பானந்துறை பட்டினசபை எல்லைக்குள் புதிதாகத் தவறணைகளைத் திறக்கும் உரிமையையும், சாராய விநியோகப் பொறுப்பையும் பானந்துறை பட்டினசபைக்கு அரசாங்கம் அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்பதென்ற தீர்மானமொன்றை பட்டினசபைத் தலைவர் திரு. டிற்றஸ் குணதிலகா முன்னறிவித்தல் செய்துள்ளார்.

பட்டினசபையின் எதிர்வரும் மாதாந்தக் கூட்டத்தில் இது பற்றிய விவாதம் நடைபெறும்.

வாடிவீடுகளில் சாராயம் விற்பனைசெய்யவும், சபைக்கு அரசாங்கம் உரிமையளிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்க அதிபர்

காக்தான்குடி, திங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக திரு. டி. அலுவிஹாரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று மடுத் திருநாள்

மன்னர், திங்கள்

மருதமடுத் திருப்பதியில் இம்மாதம் 15 ந் திகதி கொண்டாடப்படும். 'ஆரோகணத் திருநாளுக்காக இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் பக்தர்கள் குவிந்தவண்ணமிருக்கின்றனர். புனித சவேரியார் கல்லூரியைச் சேர்ந்த சாரணர் படையினர் மடுக்கோவிலு கு வந்துள்ளனர்.

சிற்றம்பலம் வெள்ளிக் கிண்ணம்

மன்னர், திங்கள்

மன்னர் மாவட்ட விளையாட்டுக் கழகத்தாரால் நடாத்தப்படும் சிற்றம்பலம் வெள்ளிக் கிண்ணத்துக்காக இவ்வருடம் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் சென். சேவியர்ஸ் கல்லூரி, மன்னர்ப் பொலிஸ், மத்திய மகாவித்தியாலயம், சென். செபஸ்தியன், பப்ளிக் சேவிஸ், முருங்கன் சென். யோசப் முதலிய னபோட்டியிடவிருக்கின்றன.

கட்டிட சாமான்கள்

கை மார்க் சிமிந்தி
அசாலே ,,
டால்மியா ,,
எச் அயண், ஆங்கிலயண்
பிளாட்டயண், டீ அயண்
கல்வனைஸ் கூரைத் தகடுகள்
அலுமினியம் ,, ,,
அஸ்பெஸ்டாஸ் ,, ,,
ராணி மார்க் கூரை ஓடுகள்
மஹாராணி மார்க் ,, ,,
இரும்புத் தகடுகள்
கல்வனைஸ் பைப்

மிகவும் சகாயமான விலைகளில்
கிடைக்குமிடம்

செட்டிநாட்

காப்பரேஷன் பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

செவ்வாய் 15-8-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை. 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 இந்திரா சுப்பிரமணியம்–பாட்டு, 7-30 நேயர் விருப்பம். 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 தேர்ந்த இசை, 9-30 நாகஸ்வரம்

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 வந்தே மாதரம், 6-50 தாயின் பொன்னடி, 7-05 சென்னை அஞ்சல், 8-30 நாமகிரிப்பேட்டை, கே. கிருஷ்ணன் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 இசைக் கோவை, 1-00 ஜயபாரதம் - இசை சித்திர நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 சென்னை அஞ்சல், 2-30 இசைக்கோவை, 3-00 டி. எம். சௌந்தரராஜன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்). 5-00 சிறுவர்களுக்கான கதம்ப நிகழ்ச்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் - பாட்டு, 9-30 என்ன தவம் செய்தனை - தயாரிப்பு: கே. சி. தியாகராஜன்.

விவசாயிகள் போதாது

இரத்தினபுரி, திங்கள்

போதிய விவசாயிகள் இல்லாத காரணத்தினால், குறுவிற்றி கோரளைப் பகுதியைச் சேர்ந்த அநேக நெல்வயல்களில் இம்முறைக்கான பயிர்ச் செய்கை நடைபெறமாட்டாது எனத் தெரியவருகிறது.

வேலை செய்வதற்கான விவசாயிகள் இல்லாத காரணத்தினால், சுமார் 200க்கு அதிகமான நெல்வயல்களில் இம்முறை பயிர்ச்செய்கை நடைபெறமாட்டாது. இந்நிலங்களில், அநேக பகுதிகள் 'பரம்கார்டன் குறாப்', மகாவெலத் தோட்டம் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்தவைகளாகும்.

புதியவரவு-செலவு

திட்டத்திற்கு எதிர்ப்பு இயக்கம் நாடுமுழுவதும் ஆரம்பிக்க யு. என். பி. திட்டம்

கொழும்பு, திங்கள்

"புதிய வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் ஒரு இயக்கத்தை ஐக்கிய தேசிய கட்சி ஆரம்பிக்கும்" என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. டட்லி சேனனயக்கா திம்பிரிகஸ்யாயாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

புதிய வரவு செலவுத் திட்டத்துக்கு ஆட்சேபம்தெரிவிக்குமுகமாக யு. என். பி. யினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் திரு. டட்லி மேலும் பேசுகையில் இடது சாரிக் கட்சிகளின் கொள்கைகளைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறதென்றார்.

"சுயேச்சைகளை மூன்று தலைக் கழுதைகள் என்று ஒரு சமயம் வர்ணித்த டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா இப்பொழுது சுயேச்சைகளை ஆதரிக்கிறார்" என்று திரு. டட்லி சேனனயக்கா கூறினர்.

கறுவாக்காட்டு உபதேர்தலில் அரசாங்கம் ஆதரித்த அபேட்சகரையே யு. என். பி. யின் அபேட்சகர் தோற்கடித்து வெற்றி குடியது யு. என். பி. யின் செல்வாக்கிற்கு ஒரு உதாரணம் என்று திரு. டட்லி தெரிவித்தார்.

அரசாங்கத்தைக் கண்டித்துப் பேசுவதுடன் நின்று விடுவதென்றும் எதிர்த்து வாக்களிக்காமல் மதில் மேல் பூனையாக இருந்துவிடுவதென்றும் ஒரு சமயத்தில் முடிவு செய்த கம்யூனிஸ்ட் கட்சி சீனி, மாவு, வெற்றிலை விலைகள் கூட அதிகரித்ததைக் கண்டு, அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைக் கண்டு எதிர்த்து வாக்களிப்பு தென்று முடிவு செய்துள்ளதென திரு. டட்லி கூறினர்.

யு. என். பி. குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்ததென்றும் அரிசி விலையைக் குறைத்த தென்றும் கூறிய திரு. டட்லி "நாங்கள் செய்து வைத்தவைகளை இன்றைய அரசாங்கம் நாசமாக்குகிறது. ஏழை மக்கள் மீது வரியைச் சுமத்தி தமது ஷாக்களில் பணத்தைச் செலவிடுகிறது" என்று கூறினர்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு பேசுகையில் இந்த அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருந்தால் மக்களுக்கு என்ன விதமான கஷ்டங்கள் ஏற்படுமென்பதைத் தெரிவிக்கவேண்டியது யு.என்.பி.யின் கடமையென்றார்.

மன்னரில் சுதேசி வாரம்

மன்னர், திங்கள்

"ஒரு நாட்டின் வாழ்வும் தாழ்வும் அந்நாட்டின், பொருள் வளத்திலேயே தங்கியுள்ளது. பொருள் வளமுள்ள நாடுகள் சிறப்படைந்து வருகின்றன. எம். நாட்டுப் பொருள்வளம் நலிவடையாதிருக்க குடிசைக் கைத்தொழிலைப் பெருக்கி ஆதரித்தல் வேண்டும். படித்த இளைஞரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குடிசைக் கைத்தொழில்களை நாம் ஆதரிப்பதன்மூலம் நீக்கமுடியும். நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் பணத்தைக் குறைத்து எம் வாழ்க்கையை உயர்த்துவதற்காக நாம் சுதேசிவாரத்தை ஆரம்பிப்போம்."

இவ்வாறு மன்னர் மாவட்டக் கிராம முன்னேற்றக் குடிசைக் கைத்தொழில் அதிகாரி திரு. ச. கந்தவனம் சுதேசிவாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்னேடியாக மக்களுக்கு விடுத்த அறிக்கையிற் குடிப்பிட்டார்.

சுதேசிவாரம் இம்மாதம் 14-ம் திகதி தொடக்கம் நடைபெறும்.

ரயில் நேரம்

யாழ்ப்பாணம் — கோட்டை
*காலை 5-42 - பி. ப. 1-22
**பி. ப. 2-25 - இரவு 10-15
மாலை 6-40 - காலை 5-05

கோட்டை — யாழ்ப்பாணம்
**காலை 6-00 - பி. ப. 1-23
* பி. ப. 2-05 - இரவு 9-52
மாலை 7-15 - காலை 5-05

* 'உத்தரதேவி'
** 'யாழ்தேவி'

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉருந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொணரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

தொழிலாளி-விவசாயியை பாதிக்கும் திட்டம்

உருப்படாது என்கிறார் சமசமாஜக்கட்சி பிரமுகர்

நாவலப்பிட்டி, திங்கள்

"சோஷலிஷ மென்ற வார்த்தையை மட்டும் அடிக்கடி உபயோகிப்பதால் சோஷலிஷம் வந்துவிடாது. இந்த அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் தொழிலாளர்களை மட்டுமல்லாமல் விவசாயிகளையும் பெருமளவில் பாதிக்கிறது. தொழிலாளி—விவசாயிகளை பாதிக்கும் திட்டம் வெற்றி பெறுது".

இவ்வாறு நாவலப்பிட்டி சமசமாஜக் கட்சி காரியக்கமிட் பிரமுகர் திரு. க. பிரேமசம்பு அகில இலங்கை மோட்டார்-பஸ் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி கிளையின் பொதுக் கூட்டத்தில் பேசும் போது கூறினர். நாவலப்பிட்டி ஜில்லாப் பிரதிநிதி திரு. யூ. நவரத்தினு இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. க. பிரேமசம்பு மேலும் கூறியதாவது:-

தற்போதைய வரியின் சுமையை தாங்கமுடியாமல் பொதுமக்கள் கஷ்டமடைகின்றனர். சாதாரண மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் வரவு செலவு திட்டம் இது. இந்த நடவடிக்கையால் பொது மக்களின் நல்லெண்ணத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இழந்து வருகிறது.

களின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையையும் உடனடியாக நீக்கவேண்டும். மாவு, சீனி, தீப்பெட்டி என்பனவற்றின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். இல்லையேல் யு. என். பி. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கதிதான் இந்த அரசாங்கத்திற்கும் பொது மக்களால் போதிக்கப்படும். உண்மைப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்க்காத எந்தஅரசாங்கமும் நீடித்து நிற்க முடியாது

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை

239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேர்தல்களுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்

விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

மகத்தான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30க்கும்
இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்
மற்றும் பலர் நடித்த

மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

மனோஹரா (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30,
இரவு 9-30 மணிக்கும்

பிரேம் நசீர் - எம். என். ராஜம்
நடித்த
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

மாலை 4 மணிக்கு
HORSE SOLDIERS

இலங்கை சர்வகலாசாலை வெளி மாணவர்கள்

அடுத்த மார்ச் மாதம் பரீட்சை நடக்கும்

கொழும்பு, திங்கள்

இலங்கைச் சர்வகலாசாலை வெளிமாணவர்களுக்கான பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடக்க இருக்கிறது. ஆனால் பரீட்சைக்கான பாடத் திட்டம் இதுவரை தயாரிக்கப் படவில்லை.

வெளிமாணவர் குழு ஒன்று சர்வகலாசாலை உபவேந்தரைச் சந்தித்து, தங்களுக்கு ஒரு வருஷத்திற்கான பரீட்சைக்கு ஆறு மாதகாலம்தான் இருக்கிறதென்றும், சர்வகலாசாலையில் இருந்து படிப்பவர்கள் முழு வருஷத்தையும் பயன் படுத்த முடியும் என்பதை விளங்க வைக்கும்.

கார் மோதி மரணம்

நீர்வேலி, திங்கள்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த 40 வயதான வெள்ளையர் கதிர்காமு என்பவர் கடந்த சனிக் கிழமை இரவு 7 மணியளவில் தனது வயலிலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது இனம் தெரியாத மோட்டார் ஒன்றினால் மோதப் பட்டு பலத்த காயங்களுடன் வீதி ஓரத்தில் கிடந்தாரென்றும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டு சிறிது நேரத்தின் பின் மரணமானாரென்றும் தெரிகிறது. இச்சம்பவம் புத்தூர் சாவகச்சேரி வீதியில் அந்திராணியில் நடைபெற்றது.

இவர் முன்று பிள்ளைகளின் தந்தை. கோப்பாய் பொலிசார் புலன்விசாரித்து வருகின்றனர். அடித்துவிட்டுச் சென்ற அந்த இனம்தெரியாத கார் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லையாம். இதுசமபந்தமான தகவல்களை கோப்பாய்ப் பொலிசுக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

புதிய நியமனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

டாக்டர். திருமதி. மகேஸ்வரி துரையப்பா, யாழ்ப்பாண உதவிவைத்திய சுகாதார அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவின் பாரியார்.

விளையாட்டு மைதானம்

கொழும்பு, திங்கள்

ஹவுலொக் பார்க்கிலுள்ள மூன்று விளையாட்டு மைதானங்களில் ஒன்றை. அந்த இடத்தில் கல்வி பயிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் நன்மைக்காக கொழும்பு மாநகரசபை எடுக்கவேண்டுமென்று, முனிஸிப்பல் கமிஷனர் திரு. பி. ஏ. ஜெயசிங்கா கொழும்பு மேயருக்கு சிபார்சு செய்திருக்கிறார்.

கம்யூனிஸ்ட் தலைவர் கோபாலன்

புதுடில்லி, ஆக. 13

கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலனுக்கு ஆலப்புழை கோர்ட்டில் விதிக்கப்பட்ட தண்டனையை, கேரள உயர்நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது. அவருக்கு ரூ. 500 அபராதம் அல்லது 6 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. திரு. கோபாலன் அபராதத்தைச் செலுத்தினர்.

பட்டினசபை சுகாதார விழா

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபையின் வருடாந்த சுகாதார விழா இம் மாதம் 23ந் திகதி நடைபெறவிருக்கிறது. இவ் விழாவை சிறந்தமுறையில் நடத்துவதற்கு காங்கேசன்துறைப் பட்டின சபையின் தலைவர் திரு. ஏ. வி. சதாசிவம், சபையின் காரியதரிசி திரு. ஏ. கந்தசாமி, சுகாதார இன்ஸ்பெக்டர் திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோர் ஒழுங்குகள் செய்துவருகின்றனர்.

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்குமென வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட, கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இவ் வருடமும் நடைபெறும். இத்துடன் கயிறிழுத்தல், மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆகியனவும் நடைபெறும் எனத் தெரியவருகிறது. இச் சுற்றுப் போட்டிகள் அடுத்த வாரத்தில் நடைபெறும்.

கூலென்ஸ் இன்றி லொறி செலுத்தினர்

மாவிட்டபுரம், வெள்ளி

சி. வை. 874 என்னும் இலக்கம் பொறித்த லொறியை கூலென்ஸ் இல்லாமல் செலுத்தியதாக பரமநாதர் அம்பலவாணர் என்பவர்மேல் கன்னகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யு. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில், பொலிசாரினால் தேடப்பட்ட பரமநாதர் அம்பலவானரை பொலிசார் கைது செய்துகோர்ட்டில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி எதிரியை ரூபா 250 பிணையில் விடுதலை செய்தார்.

அரசாங்க ஊழியர்களின் பட்டியல்

கொழும்பு, திங்கள்

கொழும்பில் சொந்த வீடுகள் இருக்கக் கூடியதாக பங்களாக்களிலும், பிளாட்களிலும் வசிக்கும் அரசாங்க ஊழியர்களின் பட்டியல் ஒன்றையும், வேலையில் இருந்து ஓய்வு பெற்று பென்ஷன் வேண்டிக் கொண்டு பங்களாக்களில் தொடர்ந்து வசித்து வருபவர்களின் பட்டியல் ஒன்றையும் திறைச்சேரி தயாரித்துக் கொண்டிருக்கிறது.

மதுரை, ஆகஸ்ட் 14

தி. மு. க. மதுரை மாவட்டக் காரியதரிசி திரு. எஸ். முத்துவைப் பொலிஸார் கைது செய்ததைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்கள் என்று கருதப்படும் 16 பேரை இதுவரையில் மதுரைப் பொலிஸ் சி. ஆர். பி. ஸி. 151 பிரிவின் கீழ் கைது செய்துள்ளது. மதுரை முத்துவை பிணையில் விடும்படி பெட்டிஷன் மதுரை உப மாஜிஸ்ரேட்டுக்கு இன்று சமர்ப்பிக்கப்படும்.

ஆங்கிலம் கற்பிப்பதில் பிரிட்டிஷ் கவுன்ஸில் பயிற்சி

பண்டாரவளை, திங்கள்

பிரிட்டிஷ் கவுன்ஸில், பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளருக்கு பண்டாரவளை மகாவித்தியாலயத்தில் ஆகஸ்ட் 7ம் திகதி முதல் ஆகஸ்ட் 26ந் திகதி வரை மூன்றுவார விடுமுறை பயிற்சிகளை நடத்தும்.

இப்பயிற்சி பிரிட்டிஷ் கவுன்ஸில், கல்வி இலாகா, ஆகியவற்றின் ஒத்துழைப்பின் சார்பிலே உண்டாக்கப்பட்டு கல்வி அதிகாரி திரு. எஸ். எப். டீ. சில்வாவால் திறந்து வைக்கப்பட்டது.

விடுமுறை காலங்களில் தங்கி கீழ்பிரிவு பாடசாலைகளுக்கு எவ்விதம் ஆங்கிலம் படிப்பது பற்றி பயிற்சி அளிப்பது இது வேகடைசி முறையாகும். பிரிட்டிஷ் கவுன்ஸில் இதே போன்ற புதிய பயிற்சிகளை தொடர்ந்து நடத்தும். வரும் வருடம் மூன்று வாரப் பயிற்சி திட்டத்தில் ஜி. ஸி. ஈக்கும் சர்வகலாசாலை உட்பிரவேசிக்கும் வகுப்பிற்கும் ஆங்கிலம் படிப்பிப்பதைப் பற்றிய பயிற்சியாகவே இருக்கும்.

இவ்வருடம் குருவித்தயாலயத்திலிருந்து பயிற்சி ஆசிரியரும் ஆசிரியைகளும் பயிற்சி பெறுகின்றனர்.

மூன்று பதவிகள்

இப்பயிற்சி கல்வி அதிகாரியின் உத்தரவின் கீழ்தான் நடைபெறுகின்றது.

பிரிட்டிஷ் கவுன்ஸில் கல்வி அதிகாரி திரு. பி. எச். ஜி. கிப்ஸ், இப்பயிற்சிக்கு அதிகாரியாவர். இவருக்கு ஆதரவாக பிரிட்டிஷ் கவுன்ஸில் பிரதிநிதி திரு. ஆர். கே. பிராடியுடி, கண்டி பிரிட்டிஷ் கவுன்ஸில் அதிகாரி, திரு. தி. ஏ. டபிள்யு. வில்விஹிலும், இருக்கின்றனர்.

கல்வி இலாகா அதிகாரிகளும் இப்பயிற்சிக்குப் பொறுப்பாக விருந்து முழு நிகழ்ச்சிகளையும் கிரமமாக நடத்த உதவி புரிந்து வருகின்றனர்.

இதற்கு முன் வருடம் பிரிட்டிஷ் கவுன்ஸல் இப்பயிற்சியில் பங்கு பெற ஐக்கிய அரசாங்கத்திலிருந்து ஒரு நிபுணரை வரவழைத்திருந்தது. இவ் வருட பிரதம விருந்தாளியாக கல்வி இலாகாவின் சவுதாம்டன் சர்வகலாசாலை விரிவுரையாளர் செல்வி எம். கே. கான் கொக்ஸ் வந்துள்ளார்.

கொடிகாமம், திங்கள்

தென்மராட்சி கிழக்குப் பகுதியில், கமத் தொழிலை அபிவிருத்தியாக்கும் நோக்கத்துடன் தென்மராட்சி காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம், கிராமக கிருஷிகவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. எஸ். சந்திரசேகரம் ஆகியோர் தென்மராட்சி கிழக்கிலுள்ள குளங்களைச் சீராக்குவதற்காகப் பார்வையிட்டனர்.

இலங்கை பூராவும் கொண்டாடப்படும் சுகாதார வாரத்துடன், இப் பட்டினசபையின் சுகாதார தினம் கொண்டாடப்பட இருந்த போதிலும், சில தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டு இது ஒத்திவைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.